போன் நெ 15. விலை 2 அணா REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 26—7—53 | இதழ் 4

அலகாபாத்தாரின் அத்துமீறிய ஆத்திரம்!

ரயில் நிறுத்தம் பக்குவமற்றவர் செயலாம்!

பண்டிதரின் பதட்டமான பேச்சு!

1942ல் நல்லது—1953ல் கெட்டது!

ஆசிய ஜோதியின் ஆய்வுரை!

தண்ணீர் குடித்தால் தாகம் தீரும் என்று ஒருவன் கூறினால், இல்லை, இல்லை, சோறு சாப்பிட்டால் பசி நீங்கும் என்று வேறொருவன் கூறி அதற்கு வியாக்கியானம் செய்து தனக்கிருக்கும் மேதாவித்தனத்தைக் காட்டிக்கொண்டால் அப்படிப்பட்டவனைப்பற்றி என்ன எண்ணுவீர்கள்? தாகத்துக்கும் பசிக்கும் உள்ள தாரதம்மியம் தெரியாதவன் — தண்ணீர் குடித்தால் பசி நீங்காது — சோறு சாப்பிட்டால் தாகம் தீராது என்ற சிறு விஷயத்தையே புரிய முடியாத குழந்தைப் பருவத்தில் இருப்பவன் என்றுதானே கூறுவீர்கள். ஆனால், இவ்விதம் கூறியவன், குழந்தைப் பருவத்தில் இல்லை, அறுபது வயதைத்தாண்டிய முதியவன் என்றால், அப்படியானால், வயது முதிர்ந்த காரணத்தால் சிலருக்குப்புத்தி தடுமாறிக் கண்டபடி புலம்புவார்களாம்; அதுபோல் இவனும் தனது கிழப் பருவத்தின் கோளாறினால் எதையெதையோ உளறிக் கொட்டுகிறான் என்று கருதுவீர்கள். ஆனால் நிலைமையைக் கவனிக்கும்போது அப்படிக்கூறுவதற்குமில்லை. இவ்விதம் கூறியவன், பசி என்றால் என்ன? அதற்கு என்ன செய்யவேண்டும்? தாகம் என்றால் எப்படிப்பட்டது? அதை எப்படித் தீர்ப்பது? என்ற இவற்றிற்கு ஏற்ற—பொருத்தமான விளக்கம் கூறும் ஆற்றலைப் பெற்ற மேதாவி என்று பலராலும் புகழப் படுபவன். என்றபோதிலும், தண்ணீர் குடித்தால் தாகம் அடங்கிவிடும் என்று கூறுபவனைப் பார்த்து சோறு சாப்பிட்டால் பசி நீங்கிவிடும் என்று கூறுகிறான். ஏன் இப்படிக் கூறுகிறான்? காரணம்என்ன? சிந்தித்துப்பார்த்து முடிவு கூற வேண்டிய விஷயமென்று சிலர் அவசரப்பட்டுக் கூறக் கூடும் ஆனால், இது, சிந்தனையைத் தொடவேண்டிய அவசியமற்ற மிக மிகச் சாதாரண விஷயம். தாகம் தீரத்தண்ணீர் குடிக்கிறான் என்பது சிந்தித்துத் தெளிந்தறிய வேண்டிய சிக்கலான பிரச்னை அல்ல. சோறு சாப்பிட்டால் பசி தீரும் என்பதும் பக்குவம் அடைந்தவர்களின்பேச்சுமல்ல. என்றாலும், மற்றவர்கள் எல்லோரும் பக்குவம் அடையாதவர்கள், தான் ஒருவன்மட்டுமே எல்லாத் துறைகளிலும் பக்குவம் அடைந்தவன் என்று கூறிக்கொண்டு, தாகம் தீரத் தண்ணீர் குடிக்கிறேன் என்று சொல்பவனைப் பார்த்து, சோறு சாப்பிட்டால் எப்படியும் பசி தீருமப்பா என்று கிண்டல் செய்கிறான். எனவேதான் இப்படிப்பட்ட ஒருவனை எந்த ரகத்தில் சேர்ப்பது என்று கேட்க வேண்டியிருக்கிறது. அறிவில்லாதவன், முட்டாள், சிறுபிள்ளை, பைத்தியக்காரன், பித்தலாட்டக்காரன் என்றெல்லாம் கூறத் தோன்றும் உங்களுக்கு. ஆனால், உண்மை அதுவல்ல. தான் ஒரு தந்திரசாலி என்பது அவனது நினைப்பு. எனவே தான் தாகம் தீரத் தண்ணீர் குடித்தான் என்று கூறுபவனைப் பார்த்து சோறு சாப்பிட்டால் பசி தீரும் என்று பசப்புகிறான்—அல்ல, அல்ல, பாசாங்கு செய்கிறான். தான்செய்த தவறை மறைக்க இது ஒரு தந்தி

ரம் என நினைக்கிறான் அந்த நவ பாரதத் தந்திரசாலி. ஆனால் அவன் ஒரு அடிமுட்டாள், அற்பன், அயோக்கியன் என்று அறிவுலகம் அவனைப்பற்றிக் கூறினாலும், அவன் அதற்காகக் கவலைப்படாமல்........ காரியத்திலே கண் என்ற போக்கில் நடந்துகொள்கிறான்.

*

15—7—53-ல் தமிழ் நாடெங்கும் ரயில்கள் நிறுத்தப்பட்டன. இது சம்பந்தமாகப் பதினொரு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் துப்பாக்கிக்கும் தடியடிக்கும் ஆளாகிப் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றனர்—மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய ரயில் நிறுத்தம் எதற்காகக் கையாளப்பட்டது? காரணம், பத்துப்பதினைந்து நாட்களுக்கு முன்பிருந்தே விளக்கப்பட்டது. பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. பொதுமேடைகளில் பேசப்பட்டது. மாநாடுகளில் தீர்மானிக்கப்பட்டது. துண்டு வெளியீடுகளின் மூலம் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. எனவே அதிகாரிகள் அனைவரும் இச்சம்பவம் நடப்பதை முன்கூட்டியே அறிந்திருந்தனர்—அறிவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், ஒருவருக்கு மட்டும் இந்த விஷயம் தெரியாதாம். யாருக்கு இந்த விஷயம் முக்கியமாகவும் முதன்மையாகவும் தெரிய வேண்டுமோ, அவருக்கேதான் இது தெரியவில்லையாம். மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறைப்பட்டும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தும் பத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் கொடுமை விளைவிக்கும் அளவுக்கு நடைபெற்ற சம்பவம் அவருக்குத் தெரியாதாம். எனவேதான் அதைப் பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசவில்லை என்று நாம் நினைக்கவேண்டுமென்பது அவரது நோக்கம். அதனாலேதான், அவர், தற்போது சென்னை மாகாணத்திலும் கல்கத்தாவிலும் நடைபெற்ற—நடைபெறும் கிளர்ச்சிகளைப் பற்றி இலட்சுமணபுரி என்ற ஊரில் (வடக்கே) 17—7—53-ல் பேசியபோது, 15—7—53-ல் இங்கு நடைபெற்ற சம்பவத்துக்கு வேறு பெயர் கொடுத்துப் பேசியிருக்கிறார்.

அவர் யார் என்று கேட்கிறீர்களா? அவர்தான் ஆசிய ஜோதி! அகண்ட இந்தியாவின் ஏக தலைவர்! அகிம்சா மூர்த்தியான காந்தியடிகளின் பிரதம சீடர்! ஐரோப்பாவின் தோழர்! அமெரிக்காவின் நண்பர்! இங்கிலாந்தின் செல்லப் பிள்ளை! முன்னாள் சமதர்மவாதி! இந்நாள் தனியுடைமைவாதி! டில்லி ஆட்சிப் பீடத்தின் முதல்வர்! பண்டித நேரு அவர்கள் தான், சென்னையில் 15—7—53-ல் நடைபெற்ற சம்பவத்துக்கு மறு பெயர் கொடுத்துப் பேசியிருக்கிறார். ஆனால் கல்கத்தாவில் நடைபெறும் கிளர்ச்சியை மறைக்காமல் பேசியிருக்கிறார். கல்கத்தாவில் டிராம்வே கட்டணத்தில் ஒரு தம்படி உயர்வு செய்ததை ஆட்சேபித்து நடைபெறும் பொது ஜனக் கிளர்ச்சியை மறைக்காமல் பூசி மெழுகிச் சமாதானம் கூறுகிறார். அதே சமயத்தில் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற கிளர்ச்சியை மறைத்துப் பேசுகிறார்.

15—7—53-ல் இங்கு நடைபெற்ற கிளர்ச்சி, அதாவது ரயில் நிறுத்தம், ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் புதுக் கல்வித் திட்டம் பற்றியதென்று பண்டித நேரு பேசியிருக்கிறார். ஒரு நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கும் தலைவர் பேசியிருக்கிறார் இவ்விதம்!

புதுக் கல்வித் திட்டத்திற்கும் ரயில் நிறுத்தத்திற்கும் எந்த விதமான சம்பந்தமுமில்லை.

ரயிலை நிறுத்தியதற்கு நடைபெற்ற கிளர்ச்சி வேறு.

புதுக் கல்வித் திட்டத்தை எதிர்ப்பதற்கு நடைபெறும் கிளர்ச்சி வேறு.

ரயிலை நிறுத்தும் கிளர்ச்சி ஒரு நாளோடு முடிவடைவது

புதுக் கல்வித் திட்ட எதிர்ப்புத் தொடர்ந்து நடைபெறுவது.

முன்னையது ஒரு கண்டன அறிகுறி.

பின்னையது ஒரு இனமக்களின் அடிப்படை உரிமைக்காக, வெற்றி காணும்வரை தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சி.

முன்னையது மானத்தை அடிப்படையாகக் கொண்டது.

பின்னையது உரிமையை அடிப்படையாகக் கொண்டது.

இரண்டு கிளர்ச்சிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என்ற போதிலும், ஒரு இன மக்களின் மானத்துக்காகவும் உரிமைக்காகவும் நடைபெறும் பொதுக் கிளர்ச்சி தான் என்றபோதிலும் 15—7—53-ல் நடைபெற்ற ரயில் நிறுத்தக் கிளர்ச்சி எந்தவிதத்திலும் புதுக் கல்வித் திட்டத்தோடு சம்பந்தப்படவில்லை.

தனிப்பட்ட கிளர்ச்சியாக நடத்தப்பட்டது தென்னாட்டுமக்களை

முட்டாள்கள்!
அறிவிலிகள்
சிறுபிள்ளைத்தனக்காரர்கள்
பக்குவமற்றவர்கள்

என்று பண்டித நேரு பேசிவருவதைக் கண்டிக்கும் அறிகுறியாகவே 15—7—53ல் தமிழ் நாடெங்கும் ரயில்கள் நிறுத்தப்பட்டன. இது முன் கூட்டித் தெரிவித்துச்செய்யப்பட்டதாகும். இது பண்டிதருக்குத் தெரியாமலிருக்க எந்த விதமான காரணமும் இருக்கமுடியாது. என்றபோதிலும், அன்றையநிகழ்ச்சியைப் புதுக் கல்வித் திட்டத்தோடு தொடர்புபடுத்தி, தம்முடைய

புத்திசாலித்தனத்தையும்
யோக்கியப்பொறுப்பையும்
பெருந்தன்மையையும்
பக்குவப்பண்பையும்

விளக்கப் பார்க்கிறார். நாட்டில் வாழும் அனைவருமே பாமரர்கள், ஒன்றுமறியாதவர்கள்—அறிய முடியாதவர்கள் என்ற நினைப்போடு பேசுகிறார். அதிகாரப் போர்வை அனைத்தையும் மறைத்துவிடும் என்ற மமதையோடு பேசுகிறார். இந்த மமதையை அவருடைய 'அகண்ட இந்தியா' முழுவதும் செலுத்த முடிகிறதா என்றால், அது தான் முடியாத காரியம் அவருக்கு.

கல்கத்தாவில் டிராம்வே கட்டண உயர்வை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துபவர்களைப் பார்த்து,

> "தாய் நாட்டுக்காக அரும் பெரும் தியாகங்கள் புரிந்த வங்காளத்தில் சிலர் இவ்விதம் பொறுப்பற்ற செயல்களில் ஈடுபடுவது அழகாகஇல்லை"

என்று அன்புரை வழங்கியுள்ளார்.

இங்கு, தமிழ்நாட்டில், வடநாட்டு மொழியான இந்திக்கு முதலிடமா?

சித்தூர் ' மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகள் ஆந்திராவில் சேரலாமா?

என்று கூறி அமைதியான முறையில் கிளர்ச்சி செய்பவர்களை ஆத்திரமும் ஆணவமும் சம எடையாகக் கலந்து, கண்ணையும் கருத்தையும் மூடிக்கொண்டு திட்டுகிறார்.

அங்கே அன்புரை!
இங்கே ஆத்திரம்!
அங்கே அமைதி!
இங்கே ஆணவம்!
அங்கே உபதேசம்!
இங்கே உக்கிரம்!

ஏன் இந்நிலை? ஒருநாட்டின் 'முடிசூடா மன்னரு'க்கு, தமது 'முடி'யின் கீழ் குடிவாழும் மக்களில் ஒரு சிலரை ஆரத்தழுவியும், ஒருசிலரை ஆத்திரத்தோடு திட்டிப்பேசவுமான நிலைமை ஏன் ஏற்பட்டது? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா தேசிய நண்பர்கள்!

வங்க மக்கள் செய்யும் காரியங்கள் அழகாக இல்லையாம்!

திராவிட மக்கள் செய்யும் காரியங்கள் ஆத்திரத்தை உண்டாக்குகிறதாம்!

யாருக்கு?

ஆசிய ஜோதியாம் பண்டிதருக்கு!

வடநாட்டு ஆட்சியை வழிகாட்டியாகக் கொண்டு எதற்கெடுத்தாலும் வடக்கு நோக்கி வழிபார்த்துக்கிடக்கும் திராவிட இனத்தில் தோன்றிய தேசிய நண்பர்களே! தென்னாட்டவர்கள் முட்டாள்களாம்!

வடநாட்டவர்கள் வாழ்த்துக்குரியவர்களாம்! தியாகம் பல புரிந்தவர்களாம்! தாய்நாட்டு விடுதலையில் பெரும் பங்கு கொண்டவர்களாம். எனவே அவர்கள் செய்யும் கிளர்ச்சிகள் அழகாக இல்லை, என்று அன்பாகப் பேசுகிறார். இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டுதான் நாம் வாழவேண்டுமென்ற 'அரசியல் தலைவிதி' இன்னும் எவ்வளவு காலத்துக்கு? சிந்தித்துப்பாருங்கள்.

தாய்நாட்டு விடுதலைக்காகத் தியாகம் புரிந்தவர்கள் வங்காளத்தவர்களாம்!

திராவிடத்தவர்கள் எவரும் தாய்நாட்டு விடுதலைக்காகத் தியாகம் புரியவில்லையா?

தூத்துக்குடி வ. உ. சிதம்பரம், திருப்பூர்க் குமரன், தில்லையாடி வள்ளியம்மை ஆகியோர் தாய்நாட்டு விடுதலைக்காகத் தியாகம் புரியவில்லையா? ஏன் பண்டிதர் அவர்களை மறந்தார். மறந்தது மட்டுமல்ல, நாட்டு விடுதலைக்காகப் பெரும் அளவில் தியாகம் புரிந்த தென்னாட்டை ஏன் அவர் துச்சமாக மதிக்கிறார்? ஏன் நண்பர் சிவஞானக்கிராமணியாரை முட்டாள் என்று நேரு சொல்லவேண்டும்? அவர் நாட்டு விடுதலைக்காகத் தியாகம் புரிந்தவர்கள் பட்டியலில் சேராதவரா? இன்று ஏன் முட்டாளாகிறார்? எண்ணிப் பார்க்கவேண்டாமா எதிர்காலத் தமிழகச் செங்கோலேந்தும் தீரர்கள்!

திருத்தணிப் போராட்டக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நண்பர் சிவஞானம் ரயில் நிறுத்தம் செய்தார். நேரு அச்செய்தியை முட்டாள்தனம் என்று கூறினார். உடனே தோழர் விநாயகம், "பண்டிதநேரு நம்மை எல்லாம் முட்டாள்கள் என்று கூறிவிட்டார்; எனவே திருத்தணிப் போராட்டத்தை நிறுத்திவைக்கிறோம்" என்று நிறுத்திவிட்டார்.

தென்னாட்டு மக்களை 'முட்டாள்' என்று பண்டிதநேரு கூறியது மன்னிக்கமுடியாத குற்றமென்று கருதும்நாம் திட்டுக்கு—ஆளாகும் திராவிட மக்கள் எந்தக் கட்சியில இருந்தாலும், அவர்களும் திராவிடர்கள் தான் என்ற பாசத்தால்—திராவிட முன்னேற்றக் கழகத்தார் அவருடைய அவசர—ஆணவப் போக்கை கண்டிக்கும் அறிகுறியாக ரயில் நிறுத்தம் செய்தோம். அது பண்டிதருக்குப் புதுக் கல்வித்திட்ட எதிர்ப்பின் அறிகுறியாகச் செய்யப்பட்ட ஒரு காரியம் என்று தெரிகிறது—அல்லது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தெரிந்தாலும் அல்லது தெரிவிக்கப்பட்டாலும், அதன் முழுஉண்மை என்ன என்பதை அறியவேண்டிய பொறுப்பும். அறிந்தபின் அதற்கேற்ப எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை என்ன விதத்தில் இருக்கவேண்டுமென்பதும் ஒரு நாட்டை ஆளும் அரசியல் தலைவனுக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

ஆனால், நமது மதிப்பிற்குரிய பண்டிதருக்கு இந்த நடைபெற்ற ரயில் நிறுத்தம் எதற்காக நடைபெற்றது? என்ன, காரணத்தை அடிப்படையாகக்கொண்டு நடைபெற்றதென்பது தெரியாதென்ற முறையில்பேசி இருப்பது, பெரிதும் வருந்தத்தக்க ஒன்றாகும்.

தேசிய பாஷையின்படி, இந்நாட்டு மன்னர்களில் பதினொரு பேரை, அந்த மன்னர்களின் ஆளுகைக் கீழ் இருக்கும் அதிகாரிகள் சுட்டுக்கொன்றிருக்கின்றனரே! இந்தக் கொடுமையைக் கேள்விப்பட்ட பண்டித நேரு அவர்கள் சிறிதும் பதையாமல், பதறாமல், அந்த நிகழ்ச்சியை மிக மிகச் சாதாரணமாக்கிப் பேசியிருப்பதை மனித சுபாவம் உள்ள எவரும் கண்டிக்காமல் இருக்க முடியாது.

எனவே தான், தாகமெடுத்துத் தண்ணீர் குடித்தவனைப் பார்த்துப், பசியெடுத்தால் சோறு சாப்பிடு என்று ஒருவன் கூறுவதைப் பண்டித நேருவின் போக்கிற்கு ஒப்பிட்டுப் பேசவேண்டியிருக்கிறது.

பண்டித நேரு நம்மை முட்டாள்கள் என்றுகூறினார். அந்த இழிவைக் கண்டிக்கும் அறிகுறியாக ரயில்களை நிறுத்துவது என்ற தாகம் நமக்கு ஏற்பட்டது. அதன்படி ரயில்களை நிறுத்தினோம். முழுவெற்றி கண்டோம். ஆனால் நேரு அவர்கள் இதனை மறைத்து, நமது கிளர்ச்சி புதுக் கல்வித் திட்டத்துக்காகச் செய்யப்பட்டது என்று கூறுவது பசிக்குச் சோறு சாப்பிட்டார்கள் என்று கூறுவதுபோல் இருக்கிறது.

தாகத்திற்குத் தண்ணீர் சாப்பிடுவதும், பசிக்குச் சோறு சாப்பிடுவதும் பொதுவாக ஒன்றுதான் என்ற போதிலும், முறையில்வேறு. தாகம் எடுத்தவன் சோறு சாப்பிட்டால் தாகம் தீராது. பசித்தவன் தண்ணீர் குடித்தால் பசி நீங்காது. அது போலவே, பண்டித நேரு நம்மை எல்லாம் இழிசொல்லால் ஏசியதைக் கண்டிக்கும் முறையில் செய்யப்பட்ட ரயில் நிறுத்தக் கிளர்ச்சியும், வர்ணாசிரமத்தை நிலைநாட்டுவதற்காகப் புகுத்தப்படும் புதுக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் அறிகுறியாகச் செய்யப்படும் மறியலும் பொதுவாக ஒன்றுதான் என்றபோதிலும், முறையில்

வேறு. இதனை உணராமல் நேரு அவர்கள் பேசியது அவருடைய நேர்மைக் குறைவையே காட்டுகிறது.

*

தமிழ் நாட்டில், எங்கெல்லாம் ரயில்கள் ஓடுகின்றனவோ, அங்கெல்லாம் ரயில் நிறுத்தம் செய்யப்பட்டது. ஆனால், தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும், துப்பாக்கிப்பிரயோகமும் தடியடியும் ஏன் நடைபெற்றது? எப்படி நடைபெற்றது? அந்த இரண்டு ஊர்களில் மட்டும் கட்டுக்கடங்காத காரியம் என்ன நடந்துவிட்டது? இதனைவிசாரித்து உண்மை எது என்பதை அறிய வக்கற்ற நேரு சர்க்கார், ஆச்சாரி சர்க்காரைத் தட்டிக்கொடுத்து, "சபாஷ், ஆச்சாரியாரே! உம்முடைய ஆட்சியில் தான் பதினொரு பேரைச் சுட்டுக் கொல்லும் 'நல்ல காரியம்' நடந்திருக்கிறது. கல்கத்தாவிலும்தான் கிளர்ச்சி செய்கிறார்கள்; ஆனால், அவர்களில் சிலரையாவது கொல்ல வங்க சர்க்காரால் முடிந்ததா" என்று கூறுவதுபோல் இருக்கிறது, நேரு இச்சம்பவம் பற்றிப் பேசியதைப் பார்க்கும்போது.

தமிழ் நாட்டில் ஆச்சாரி சர்க்காரால் நடத்தப்பட்ட கோரக்கொலையைப் பற்றிப் பேசிய நேரு,

> "இச்சம்பவம் மக்களின் சிறுபிள்ளைத்தனத்தையே காட்டுகிறது"

என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆசிய ஜோதிக்கு, எது சிறுபிள்ளைத்தனமான காரியம்? எது பெருந்தன்மையான காரியம் என்பதே தெரியாது போலும்! பொதுமக்களைத் தண்டாத் தடியால் அடித்தும் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுவது சிறுபிள்ளைத்தனமா? அல்லது ஒரு லட்சியத்துக்காக அமைதியான முறையில் கிளர்ச்சி செய்வது சிறுபிள்ளைத்தனமா? எது சிறுபிள்ளைத்தனம்? எண்ணிப் பார்க்க வேண்டாமா? மக்கட் பண்பையே மறந்து மனிதவேட்டையாடியவர்கள்பெரியவர்களாம்! மக்களின் மானத்தைக் காப்பாற்றும் முறையில் கிளர்ச்சி செய்த நாம் சிறுவர்களாம்! "வெள்ளைக்காரன் ஒரு குமரனைத் தான் கொன்றான், காரணம், அவன்எதேச்சாதிகாரமுறையில் ஆட்சி புரிந்தது. ஆனால், நாமோ பதினொரு குமரன்களைக் கொன்றுகுவித்துவிட்டோம், காரணம், நாம் 'ஜனநாயக' முறையில் ஆட்சி புரிவது. அவன் அந்நியன், ஆகையால், அச்சத்தோடு ஒருவனைக் கொன்றான். நாம் இந்நாட்டவர், எனவே, உரிமையோடு பதினொரு பேரைக் கொன்றிருக்கிறோம்" என்று கூறுகிறது, 'பெருந்தன்மை' படைத்த நேரு சர்க்கார்.

> "இது போன்ற ஆட்கள் பதவிக்குவந்தால் நாடு என்ன கதியாகும் என்பதை நினைக்க நடுக்கம் ஏற்படுகிறது"

என்று பண்டிதர் மேலும் பேசியிருக்கிறார். மானத்துக்காகவும் உரிமைக்காகவும் கிளர்ச்சிகள் நடத்துபவர்களைக் காணும்போது, அவர்கள், எங்கே தங்கள் பதவியைப் பறித்துவிடுவார்களோ என்ற ஏக்கத்தால் நடுக்கமெடுத்திருக்கும் நேரு சர்க்கார், தாமல்லாத பிறர் ஆட்சிக்கு வந்துவிட்டால் நாடு என்ன கதியாகும் என்ற நடுக்கம் ஏற்படுவதாக நாக்குளறிப் பேசுகிறது. உண்மையிலேயே நடுங்க வேண்டியவர்கள் நாம். இந்த அக்கிரம ஆட்சி இன்னும் நீடித்துக் கொண்டேபோனால், நாட்டில் இன்னும் எத்தனை, எத்தனை கொலைகள் நடக்குமோ என்ற ஏக்கத்தால் நடுக்கமெடுக்கவேண்டியவர்கள் நாம்—பொதுமக்கள். காங்கிரஸ் சர்க்காருக்கு, எங்கே தங்கள் அடாத நடவடிக்கைகளினால், தங்களுடைய பதவி பறிபோய்விடுமோ என்ற நடுக்கத்தைத் தவிர, வேறு நடுக்கம் ஏற்படக் காரணம் இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு, மக்களைக் கொலை செய்வது, சித்திரவதை செய்வது, சிறையில் பூட்டிவைப்பது போன்ற காரியங்கள் எல்லாம் சர்வசாதாரணமானவைகளாகும். இவ்விதம் கூறுவதால், நாம் பதவி ஆசை அற்றவர்கள் என்று எவரும் தவறாகக் கணக்குப் போட்டுவிடவேண்டாம். பல காலம் பதவியிலிருந்து அந்தப் 'பசி' தீர்ந்தவர்கள்தான் நாம். மீண்டும் பதவி நம்மை நாடிவந்தால், அதை முழுமனதுடன் வரவேற்போம். ஆனால், பதவியின் நிழலில் நின்றுகொண்டு பதட்டமாகப் பேசமாட்டோம்—நெஞ்சு பதறும் கொடுமைகளையும் செய்யமாட்டோம்—செய்ததில்லை. எனவே பதவிக்கு வரவேண்டுமென்ற எண்ணத்தோடு நாம் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை என்பதைமட்டும் "எங்கள் பதவி போய்விட்டால் என் செய்வது?" என்ற நடுக்கத்தோடு, பதவியைக் காப்பாற்ற அடக்குமுறைகளை அளவுக்குமீறி அவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கும் காங்கிரஸ் சர்க்கார் மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

நடுக்கம் எடுக்கிறதாம், நடுக்கம்! யாருக்கு? மனிதவேட்டையாடி மகிழும் மகானுபவர்களுக்குத், தாம் போய் நாம் பதவிக்கு வந்துவிட்டால், நாடு என்ன கதியாகும் என்ற நடுக்கம் ஏற்படுகிறதாம்! கூறுகிறார் நான்சென்சால் நாட்டையாளும் 'நல்லவர்!'

> "கொன்றன்ன இன்னா செய்யினும் அவர் செய்த, ஒன்று நன்றுள்ளக் கெடும்"

என்றுவள்ளுவர் கூறினார். நம்மில், பலரைக் கொன்று குருதியைக் குடித்தவர்களால் ஒரு நன்றும் நமக்கு ஏற்படவில்லை. ஆனால் அவர்கள் நமமவர்களைக் கொலைசெய்தபடி இருக்கிறார்கள். என்றபோதிலும், அவர்களைக் கொல்லவேண்டுமென்ற கொதிப்போ, திட்டினால் திருப்பித் திட்டவேண்டுமென்ற கெட்ட எண்ணமோ நமக்கு ஏற்படவில்லை—ஏற்படாது. காரணம், வள்ளுவர் வழியில் செல்பவர்கள் நாம் என்பது மட்டுமல்ல, வள்ளுவர் காலத்துக்கு முன்பிருந்தே நாம் (திராவிட மக்கள்) இந்தப் பண்பாட்டோடு தான் வாழ்ந்து வருபவர்கள் என்ற காரணத்தால். எனவேதான் 'நான்சென்ஸ்' என்று கூறியவர்களுக்கு நல்லறிவு உண்டாக வேண்டும்—நாட்டை ஆளும் ஆசை நமக்கில்லை—அவர்களே ஆளட்டும் என்ற முறையில் நடந்து வருகிறோம். ஆனால், நாட்டை ஆளும் சந்தர்ப்பம் அல்லது வாய்ப்பை அவர்களாகவே உண்டாக்கினால், நாம் ஒதுங்கியிருக்க மாட்டோம் என்பதையும் நடுக்கம் ஏற்பட்டிருக்கும் சர்க்காருக்கு நல்ல முறையில் கூறுகிறோம்.

ரயில்களை நிறுத்திய சம்பவம், நேருவுக்கு நடுக்கத்தை உண்டாக்கிவிட்டதாம். ஆனால், ரயில் நிறுத்தக் கிளர்ச்சியைக் காரணமாக வைத்து, இந்நாட்டு மக்களில் பதினொருபேரை, ஈவு இரக்க

மின்றிச் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி நேருவுக்கு நடுக்கத்தை உண்டாக்கவில்லையாம். ஆனால், பண்டித நேருவுக்கு நடுக்கம் ஏற்பட்டதற்கு உண்மையான காரணம், இங்கு ஆச்சாரி சர்க்காரால் நடத்தப்பட்ட படுகொலைதான் என்பது நமது அபிப்பிராயம். எப்படியென்றால், கொலை செய்த ஒருவனுக்குத்தான் நடுக்கம் ஏற்படும். அவன் வெளியில் நடமாடுவதற்கே அஞ்சுவான். எதிர்பாராத விதமாகவோ அல்லது பழிவாங்கும் முறையிலோ கொலை செய்தவனுக்கே நடுக்கம் ஏற்படுகிறதென்றால், நாட்டில் வாழும் பொது மக்களை, நாட்டை ஆளும் சர்க்காரே துரத்தித் துரத்திப் படுகாயப் படுத்தியும் கொடுங்கொலை புரிந்தும் வருகிறதென்றால், அப்படிப்பட்ட அடிமுட்டாள்தனமான சர்க்காருக்குத் தலைவனாக இருப்பவனுக்கு நடுக்கம் ஏற்படாதென்று எப்படிக் கூற முடியும்? எனவேதான் நேருவுக்கு ஏற்பட்ட நடுக்கம், ஆச்சாரி சர்க்காரால் நடத்தப்பட்ட படுகொலையைக் கேள்விப் பட்டு உண்டான நடுக்கம் என்று நாம் கருதுகிறோம். ஆனால், பண்டித நேரு இதனை மறுப்பாரானால், அவர் மனித சுபாவத்துக்குப் புறம்பே நின்று ஆட்சி புரிகிறார் என்றுதான் நினைக்க வேண்டும்.

> "உலகில் இந்தியா அடைந்து வரும் நற்பெயருக்கு இது போன்ற சம்பவங்கள் இழுக்கைத் தேடித் தருகின்றன."

என்று நேரு அவர்கள் மேலும் பேசியிருக்கிறார். "இது போன்ற சம்பவங்கள்" என்று எதனைக் குறிப்பிடுகிறார்? கல்கத்தா சம்பவத்தையா? அல்லது சென்னைச் சம்பவத்தையா? கல்கத்தாவில், டிராம் வேக் கட்டண உயர்வு, பொது மக்களால் தாங்க முடியாதது என்பதற்காகக் கிளர்ச்சி நடை பெறுகிறது. சென்னையில், தென்னாட்டு மக்களைப் பண்டித நேரு 'முட்டாள்கள்' என்று கூறியதைக் கண்டிக்கும் அறிகுறியாகக் கிளர்ச்சி, அதாவது ரயில் நிறுத்தம் நடைபெற்றது. இந்த இரண்டு சம்பவங்களும், ஒரு ஜனநாயக நாட்டில் மட்டுமல்ல, எதேச்சாதிகார முறையில் ஆளப்படும் நாட்டில் கூடச் சர்வசாதாரணமாக நடைபெறக் கூடிய சம்பவங்களேயாகும். இந்தச் சம்பவங்கள் வெளியுலகுக்கு எந்த வகையிலும் இழிவைத் தேடித் தரக்கூடியவை அல்ல. பண்டிதருக்கு, இவை போன்ற நல்ல சம்பவங்கள் இழிவை உண்டாக்கக் கூடியவை என்று தோன்றுகிறது. ஆனால், எந்தெந்தச் சம்பவங்களால், பண்டிதரின் இந்தியாவுக்கு இழிவு ஏற்படுகிறதென்பதை வெளியுலகம் கவனித்துக்கொண்டுதான் வருகிறது.

ஆப்பிரிக்காவில், மலான் இந்தியர்களுக்கு இழைக்கும் கொடுமை இந்தியாவுக்கு இழிவை உண்டாக்கவில்லை!

இலங்கையில், சேனுநாயக்கா இந்தியர்களை ஆட்டிப்படைப்பது இந்தியாவுக்கு இழிவை உண்டாக்கவில்லை!

மலேயாவில் இந்திய மக்கள் தூக்கு மரத்தில் தொங்கவிடப்படும் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள், அது, இந்தியாவுக்கு இழிவு உண்டாக்கவில்லை!

வெளியுலகில் இருந்து கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தியா, 'இதோ அடிமைச் சாசனம் பெற்றுக்கொள்' என்ற முறையில் அமெரிக்காவிடமிருந்து கடன்வாங்குகிறதே, அது, இந்தியாவுக்கு இழிவை உண்டாக்கவில்லை.

ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்ட சுதந்திரக் குடியரசின் தலைவர், இங்கிலாந்து இராணியின் முடிசூட்டு விழாவில் போய்க் கலந்துகொண்ட கேவலமான சம்பவம் இந்தியாவுக்கு இழிவை உண்டாக்கவில்லை!

ஆனால், மக்களின் மானத்தைக் காப்பாற்ற — உரிமையைப் பெற — வறுமையைப் போக்க நடத்தப்படும் சம்பவங்கள், வெளியுலகின் கண்களுக்கு இழிவை உண்டாக்குவனவாகத் தோன்றுமாம்! கூறுகிறார் உலகம் போற்றும் உத்தமர் பண்டிதர். ஆனால் உண்மையில், இந்தியாவுக்கு இழிவை உண்டாக்கும் நடவடிக்கைகள் எவை என்பது எல்லோராலும் அறியப்படும் பரம இரகசியமாகும். இவற்றை மறைக்க எதையெதையோ பேசுகிறார் நமது மதிப்பிற்குரிய பண்டிதநேரு அவர்கள். அவர்மேலும் பேசுகிறார்.

> "பஸ்களுக்கும், ரயில்பெட்டிகளுக்கும் தீ வைப்பது தவறு என்பதுமட்டுமல்ல, இதனால் சமூக விரோத சக்திகள்தான் தலையெடுத்துவிடும்"

என்பதாக. யார் இவ்விதம் கூறுவது என்று நினைக்கிறீர்கள்! யாருக்கு இந்தத் தொழில்களில், அதாவது, பஸ், ரயில் ஆகியவைகளுக்கு தீ வைப்பதில் அதிக பழக்கமோ, சாட்க்ஷாத் அவரேதான் அதனைத் தவறென்றும், சமூக விரோதமான காரியமென்றும் கூறுகிறார். அல்ல, அல்ல, உபதேசம் செய்கிறார். 1942-ல் சரியென்று தோன்றிய சம்பவங்கள் எல்லாம் 1953-ல் தவறாகத் தோன்றுகின்றன. அதிலும், நேற்று ஒரு தவறைச் செய்தவன், இன்று அதே தவறைக் கண்டிக்கிறான் என்றால், அதைவிட வேடிக்கை நிரம்பிய கேலிக்கூத்து வேறு ஏதாவது இருக்க முடியுமா?

இதில், இன்னொரு வேடிக்கை என்னவென்றால், யார் பஸ்களுக்கும் ரயில் பெட்டிகளுக்கும் தீ வைக்கும் தீமையைச் செய்யவில்லையோ, அவர்களைப் பார்த்துத்தான் 'நமது தலைவர்' தவறென்றும் சமூகவிரோதமான செயல் என்றும் கூறுகிறார். நமக்கு, அதாவது, திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கத்தினர்க்கு பண்டிதர் கூறும், பொது உடைமைகளுக்குத் தீ வைத்துத் திருவிளையாடல் செய்யும் பழக்கம் கிடையாது — ஏற்பட்டதில்லை — ஏற்படவும்மாட்டாது. அந்த 'நல்ல' பயிற்சியை நமது இயக்கம் என்றைக்குமே கற்றுக்கொள்ள விரும்பாது. அது அவர்களுக்கே — காங்கிரஸ்காரர்களுக்கே உரிமையான (Trade Mark) பழக்கம். எனவே அது, அவர்களோடு இருந்துவிடட்டும்.

எனவேதான், பதட்டமாகப் பேசும் பண்டிதருக்கு, எங்கள் அமைதியான உரிமைப் போரின் விபரம் இது என்பதை விளக்கி, ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவர், தவறான செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பொறுமையையே ஆயுதமாகக் கொண்டு அறப்போர் புரியும் மக்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி ஆபாசமான சொற்களால் அர்ச்சிக்கக் கூடாதென்று எச்சரிக்கை செய்கிறோம்.

எங்கே உங்கள் பதில்?

இரண்டுமணி நேரத்துக்கு ஒருவர்.
ஒரு நாளைக்குப் பதின்மூன்றுபேர்.
ஒரு மாசத்துக்கு 400 பேர்.
ஒன்பது மாதங்களுக்கு 3599 பேர்.

இப்படிப்பட்ட ஒரு புள்ளி விபரத்தைச் சென்னை சர்க்கார் தந்திருக்கிறது. என்ன புள்ளி விபரம் என்று கேட்கிறீர்கள். அப்படியொன்றும் திடுக்கிடக்கூடியதல்ல—திக்பிரமை கொள்ளக்கூடியதுமல்ல. தர்மராஜ்யம், இராமராஜ்யம், அகிம்சா ராஜ்யம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அங்கெல்லாம் சர்வசாதாரணமாக நடக்கக் கூடிய சம்பவம் ஒன்றின் புள்ளிவிபரம் தான் மேலே குறிப்பிட்டிருப்பது!

கொடுங்கோல் ஆட்சியில், கடவுளை நம்பாத 'காட்டுமிராண்டி' ஆட்சியில், கருத்தில் தெளிவற்றவர்களின் கண்மூடித்தனமான ஆட்சியில் நடைபெறுவது போன்ற, கொலைகள்—தற்கொலைகள் மேலே கூறப்பட்ட தர்ம ராஜ்யத்தில் நடைபெற்றிருக்க முடியாதென்று, நீங்கள் மட்டுமென்ன, அனைவருமே அப்படித்தான் எண்ணுவர்—எண்ணத்தோன்றும்.

ஆனால், நாம் மேலே குறிப்பிட்டிருக்கும் புள்ளி விபரம், கருத்தில் தெளிவில்லாதவர்களால் கண்மூடித்தனமாக ஆளப்படும் தர்மராஜ்யத்தில்—தேசிய பாஷையின்படி இராமராஜ்யத்தில்—உலக சம்பிரதாயப்படி ஜனநாயக ஆட்சியில் — அதுவும் இந்தியா என்று அழைக்கப்படும் இந்த உபகண்டத்தில்தான், இப்பொழுது சிலகாலமாக, அதாவது சுயராஜ்யம் கிடைத்தபின், சர்வசாதாரணமாக நடைபெறும் தற்கொலையைப்பற்றிய புள்ளிவிபரமே மேலே தரப்பட்டிருப்பது.

சென்ற ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 9-மாதங்களில் சென்னை மாகாணத்தில் மட்டும் எத்தனைபேர் தற்கொலை செய்திருக்கின்றனர் என்று, டாக்டர் எஸ். முத்துலட்சுமி அவர்கள் கேட்ட கேள்விக்கு 23—7—53-ல் சட்டசபையில், சர்க்கார் சார்பில் பதிலளித்த நிதி மந்திரி, மொத்தம் 3,599-பேர் தற்கொலை செய்துகொண்டனர் என்று பதில் கூறியிருக்கிறார்.

தற்கொலை செய்துகொண்டது இந்த ஆண்டில் அதிகமா? சென்ற ஆண்டில் அதிகமா? என்று தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விக்குச், சென்ற ஆண்டில் நடைபெற்ற தற்கொலைக் கணக்குத் தம்மிடம் இல்லை என்று நிதிமந்திரி பதிலளித்திருக்கிறார். ஒருவேளை சென்ற ஆண்டில் நடைபெற்ற தற்கொலை, இந்த ஆண்டைவிட அதிகமாக இருக்கலாம், அல்லது குறைவாகவும் இருக்கலாம், அல்லது கணக்கெடுக்க முடியாத அளவுக்கு மிதமிஞ்சியும் இருக்கலாம். அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

ஆனால், இவ்வளவு கொலைகளும் அசோகனது அகிம்சாக் கொடியின் கீழ் ஆட்சி புரியும் நாட்டில், சென்னை மாகாணத்தில் மட்டும் மணி இரண்டுக்கு ஒருவர் வீதம் தற்கொலை செய்துகொண்டு மாண்டனர் என்றால், இந்த உபகண்ட முழுவதும் எத்தனைபேர் தற்கொலை செய்திருப்பர் என்பதை எண்ணும் போது தான் — நாமும் இப்படிப்பட்ட அலட்சியமான ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோமே என்பதை எண்ணும்போது தான், இந்தப் புள்ளி விபரத்தைப் பார்க்கும் வெளியுலகம் கைகொட்டி நகைக்குமே என்ற கவலை நமக்கு உண்டாகிறது. ஆனால் அகிம்சா மூர்த்திகள் ஆனந்தமாகப் புள்ளி விபரங்களை வெளியிட்டவண்ணம், தற்கொலை செய்துகொள்ளும் புள்ளி விபரம் மட்டும் போதாது—ஏதேதோ காரணங்களால் ஒன்பது மாதங்களில் கொல்லப்பட்டவர்கள் 1021 பேர்தான் என்ற புள்ளி விபரமும் போதாது — சர்க்காரின் துப்பாக்கியும் குண்டாந்தடியும் எத்தனை பேரைக் கொன்று குவிக்கிறது என்ற புள்ளி விபரத்தை அடுத்த ஆண்டு அறிக்கையில் சமர்ப்பித்து, வெளியுலகின் 'சபாஷை'ப் பெறப் போகிறோம் என்ற முறையில் தூத்துக்குடியில் நால்வரையும், கல்லக்குடியில் எழுவரையும் ஒரே நாளில், சென்னை சர்க்கார் தனது துப்பாக்கிக்கு இரையாக்கி இருக்கிறது.

சட்டசபையில் கேள்வி கேட்ட டாக்டர் முத்துலட்சுமி அவர்கள்,

> "நீங்கள் சுயராச்சியம் வாங்கிய நாளில் இருந்து இன்று வரை எத்தனை பேரை உங்கள் துப்பாக்கிக்கு இரையாக்கி இருக்கிறீர்கள் என்ற புள்ளி விபரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்."

என்று கேட்டிருந்தால், கண்ணன் காட்டிய வழியை மற்றவர்களுக்கெல்லாம் காட்டியவருக்குப் பக்கத்துணையாக இருந்து பல்லவி பாடும் நிதி அமைச்சர் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் என்ன பதிலளித்திருப்பார்? இது போன்ற கேள்விகளுக்குத்தான் நமது ராமராஜ்யத்தில் பதில் கூறும் பழக்கமே இல்லையே! இப்படிப்பட்ட கேள்விகள் சட்டசபையையும் சர்க்காரையும் அவமதிப்பதாகும் என்று கூறிச், சபாநாயகர், பதலளிக்கும் நிலைமையை மாற்றியிருப்பார்.

அந்தச் சமயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து, இப்படிப்பட்ட கேள்வி ஒன்றுக்கு முன்பொரு சமயம் டில்லி சட்டசபையில் பதில் அளிக்கப் பட்டிருக்கிறது, இதோ அந்தப் புள்ளி விபரத்தைத் தருகிறேன் என்று கூறி, "காங்கிரசார் சுயராஜ்யம் பெற்றநாளில் இருந்து 1950-ம் ஆண்டு வரையில், அதாவது மூன்று ஆண்டுகளில், சர்க்காரின் துப்பாக்கிக்கு இரையானவர்கள் 3784 பேர். காயமடைந்தவர்கள் 9342 பேர். சிறைப்பட்டவர்கள் 50000 பேர். 1872 தடவை துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்ற புள்ளி விபரம் 1950-ம் ஆண்டில் தரப்பட்டது. எனவே, 1950-ல் இருந்து இன்றுவரை, இந்த மூன்றாண்டுகளில் எத்தனை பேரைக் கொன்றிருக்கிறீர்கள்? எத்தனை பேரைச் சிறையில் அடைத்தீர்கள் என்று கேட்டால், அப்போதும் சபாநாயகர் எழுந்து, ஒரு 'ஒழுங்குப் பிரச்சினை'யைக் கிளப்பி எதிர்க்கட்சித் தலைவரை மேலும் தொடர்ந்து பேசவிடாதபடி தடுத்துவிடக்கூடும். ஏனென்றால், நாட்டில் எப்படிப்பட்ட உரிமைக் கிளர்ச்சிகள் எந்த அளவில் நடைபெற்றாலும், அதன் அளவை,

முடிந்த அளவுக்குக் குறைத்து, அதை மிக மிகச் சாதாரணமான தாக்கி, "அது அன்றாடம் நடைபெறும் சம்பவம் (Day to day occurrences) கோட்டார் கவனித்துக்கொள்ள வேண்டியது, எனவே சட்டசபையில் அது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை" என்று கூறி நிராகரிக்கவும் கூடும்.

எதை வேண்டுமென்றாலும், எப்படி வேண்டுமென்றாலும் திரித்தும், புனைந்தும், மறைத்தும், மாற்றியும் பேசுவது அகிம்சா ஆட்சியின் பண்பாடுகளில் ஒன்றாக இருக்கும் போது, நாம் இவர்களிடமிருந்து நேர்மையையோ நீதியையோ எப்படி எதிர்பார்க்க முடியும்?

"சேலத்தில் ஒருவர் உணவு கிடைக்காததால், பசிக் கொடுமை பொறுக்கமுடியாமல் தெருவோரத்தில் இறந்துகிடந்தாராமே! அது உண்மைதானா?" என்று கேட்டால், "இல்லை, இல்லை, அவர் பசிக் கொடுமையால் இறக்கவில்லை; வறுமையின் காரணமாக இறந்துவிட்டார்" என்று கூறும் சாமர்த்தியத்தைப் பெற்றுள்ளதாச்சே, இந்தச் சர்க்கார்.

இல்லையேல், தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களைப்பற்றிச் சட்டசபையில் பேசியபோது,

> "இப்படிப்பட்ட சம்பவம் நடக்குமென்று எனக்கு முன் கூட்டியே தெரியும்"

என்று ஆச்சாரியார் பேசியிருக்க முடியுமா? நாமெல்லாம் இளித்தவாயர்கள் என்று எண்ணிக்கொண்டு இவ்விதம் பேசினாரா? அல்லது இவர்களால் என்ன செய்துவிடமுடியும் என்ற இறுமாப்போடு பேசினாரா? தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் நடைபெற்ற கொடுமை இவருக்கு முன் கூட்டியே தெரியுமாம்! என்ன இதன் பொருள்? போலீஸ் மந்திரி கூறுகிறார், போலீசார் சுடுவார்கள், அடிப்பார்கள் என்பது தமக்கு முன் கூட்டியே தெரியும் என்பதாக! இதற்கு விளக்கம் விவரித்துக் கூறவேண்டியதில்லை. இப்படிக் கூறியவரோ, போலீஸ் மந்திரி! சுட்டவர்களோ, போலீசார்! எனவே, தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் நடைபெற்ற கோரக் கொலைகள், யாருடைய தூண்டுகோலால் நிகழ்ந்தன என்பதை விளக்கிக் கூறவேண்டியதில்லை. அவரே கூறுகிறார், "நான்தான் சொன்னேன்" என்பதாக!

இல்லையேல், தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம், எப்படி ஆச்சாரியாருக்கு முன்கூட்டித் தெரிந்திருக்கமுடியும் என்று, நாம் மட்டுமென்ன, மனிதத் தன்மை படைத்த எவருமே கேட்காமல் இருக்கமுடியுமா?

தமிழ்நாடு முழுவதிலும் ஒரே விதமாக நடைபெற்ற ரயில் நிறுத்தக் கிளர்ச்சி, தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும், கொலைக்களமாக மாறவேண்டிய காரணம் என்ன? யோசித்துப் பார்க்கவேண்டாமா? மற்ற ஊர்களிலும்தான் தொண்டர்கள், சங்கிலியை இழுத்தும், தண்டவாளத்தின்மீது உட்கார்ந்தும், படுத்திருந்தும் ரயிலை நிறுத்தியிருக்கின்றனர். அதற்காகக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

ஆனால், அந்த இரண்டு ஊர்களில் மட்டும் ஏன் சுட்டுப் பொசுக்கும் 'அகிம்சாமுறை' கையாளப்பட்டது? அவர்களையும் கைது செய்து காவலில் வைக்கும் முறையை, அதிகாரிகள் மிகவும் சுலபமாக மற்ற ஊர்களைப்போல், கையாண்டிருக்கலாமே! ஆனால், பாவம் அந்த அதிகாரிகள் என்ன செய்வார்கள்? தலைவன் சொற்படி நடக்கவேண்டியவர்கள்தானே அவர்கள். எனவே, அவர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றினார்கள். என்றபோதிலும், நடப்பது ஜனநாயக ஆட்சி என்று சொல்லப்படுவதால், அந்த அதிகாரிகள், தங்கள் தலைவனைப் பார்த்து, "ஐயா, நீங்கள் எங்கள் தலைவர் என்ற முறையில், எது செய்யும்படி கட்டளையிட்டாலும் அதனை நிறைவேற்றித் தரவேண்டியவர்கள் தான் என்றபோதிலும், ஜனநாயகத்தின் ஒரு பகுதியை, அவசியமும் காரணமும் இல்லாமல் சுட்டுத்தள்ளும்படி கட்டளையிடுவது அவ்வளவு நன்றாக இல்லை" என்று நயமாகச் சொல்லியிருக்கலாம். எங்கே அப்படியெல்லாம் சொல்லமுடிகிறது? பிழைப்புப் போய்விடுமே என்றபீதி அவர்களை வாட்டும்போது, அவர்களால் என்ன செய்யமுடியும்? அடிபணிந்து இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டியதுதான்.

ஆனால் இப்படிக் கட்டளையிடுபவர் இன்னும் ஆட்சிப்பீடத்தில் இருந்து கொண்டிருக்கிறாரே! இதனை, பொறுமையையே பூஷணமாகக் கொண்டு மானத்தோடு வாழ்ந்த மரபில் வந்த நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே! இந்த முறையை, அல்ல, அல்ல, கொடுமையை இன்னும் எவ்வளவு காலத்துக்கு விட்டு வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? இதற்கு விமோசனமே இல்லையா? என்ன செய்யப்போகிறீர்கள்? எங்கே உங்கள் பதில்? தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் நடைபெற்ற கொலை முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்யப்பட்டதாம்! கூறுகிறார் போலீஸ் யந்திரி!

இந்தப் போலீஸ் மந்திரி — அடுத்த ஆண்டு, தற்கொலை—கொலைப் புள்ளி விபரத்தில், சக்காரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் தொகை அதிகம் இருக்கவேண்டும் என்று முன்கூட்டியே யோசித்துச் செய்கிறார் போலும்!

திரிகால ஞானியாயிற்றே இவர்! பின்னால் நடைபெறப் போவதெல்லாம் முன்னாடியே இவருக்குத் தெரியுமாமே!—சொல்லுகிறார் துணிவோடு, துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தமக்கு முன் கூட்டியே தெரியுமென்பதாக!

கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் கிளியைச் சித்திரவதை செய்யும் திறமைசாலியைப் போல், சேலம் சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்தவர்களில் 22 பேரைச் சுட்டுக் கொன்ற சயராச்சிய வீரர்களல்லவா இவர்கள்!

இப்படியெல்லாம், எதைச் செய்தாலும் ஏனென்று கேட்க எவர் இருக்கிறார் என்ற மமதையோடு ஆட்சிபுரியும் ஆச்சாரி சர்க்காரை இன்னும் எவ்வளவு காலத்துக்கு விட்டு வைத்திருக்கப் போகிறீர்கள்? எங்கே உங்கள் பதில்?

★

திராவிடநாடு

காஞ்சி] 26—7—53 [ஞாயிறு

தோழர்களுக்கு

தலைவர்கள், சிறைக்குள்!

அறப்போரிலீடுபடுவோர் அனைவரும், இழுத்துச் சென்று மூடப்படுகின்றனர்:

தடியடி! கண்ணீர்ப் புகை!!

துப்பாக்கி, துளைக்கிறது.

தோழர்களை இழந்தோம்.

இரத்தம் வழிகிறது!

3000 பேர் சிறைக்குள்!

ஆறு மாதம் கடுங்காவல்.

மூன்று மாதம் சிறைவாசம்.

*

கொத்திக் துளைக்கப்படுகிறோம்—கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எதற்காக? வர்ணாசிரமக் கல்வித் திட்டத்தை எதிர்ப்பதற்காக!—வடநாட்டு ஆதிக்கத்தை விரும்பாததற்காக!!

இவ்வளவு வேதனைகளையும் தாங்கிக்கொண்டு கிடக்கும் திராவிட சமுதாயத்தின்மீது, பழிச்சொல் வீசுகின்றன, 'இந்து', 'மித்திரன்', 'தினமணி', 'கல்கி' முதலிய ஏடுகள்.

நாம், வேண்டுமென்றே, செய்கிறோமாம்!

வகுப்புத் துவேஷத்தோடு செய்கிறோமாம்!

ஆச்சாரியார், பார்ப்பனர் என்பதால் இவைகளைச் செய்கிறோமாம்!

திசையைத் திருப்பிவிட்டு—நமது நோக்கங்களுக்கு மாசு கற்பிப்பதையே வழக்கமாகக்கொண்ட ஏடுகள், இப்போது, திட்டமிட்டுச் சதி செய்யக் கிளம்பிவிட்டன.

இந்தச் சதியைத் துவங்கிவிட்டன—வெற்றிப் பரணி பாடலாம்—வேண்டியதைக் செய்ய 'நம்மவர்' இருக்கிறார் எனும் துணிவில்.

தூத்துக்குடி —, கல்லக்குடி படுகொலைகளைக் கண்டு, அந்தக் கொடுமைகளுக்கு யார் காரணமோ, 'அவர்மீது பாயவில்லை; நம்மீது பாய்கின்றன.

நமது அமைதியான போக்குக்கு, மாசு, கற்பிக்க முனைகின்றன.

நம்மீது பழிவீச, திட்டமிடுகின்றன.

இதற்குப் பக்கபலமாக, இருக்கிறார், ஆச்சாரியார்.

அவர் கொண்டுவந்த வர்ணாசிரமக் கல்வித்திட்டத்தைக் கண்டிக்கிறோம் — இது, அவர்மீதிருக்கும் ஆத்திரத்தாலாம்!

டில்லிதர்பாரின் ஆதிக்கத்தைக் கண்டித்து ஜூலை-15 ரயில் நிறுத்தம் நடத்தினோம். அதுவும், இவர் மீதிருக்கும், ஆத்திரத்தாலாம்!!

நாடு — இரத்தக் காடாகியிருக்கிறது. மனித உரிமை—மதிக்கப்படவில்லை. கைது! தடியடி! கண்ணீர்ப்புகை! தலைவர்களைச் சிறையில் மூடிவைக்க, சதிசெய்யப்படுகிறது. இவ்வளவு அட்டூழியங்கள் நடைபெறுகின்றன — இவைகளைப்பற்றி எழுதவில்லை, இந்த ஏடுகள். திசையைத்திருப்பிடும், திருப்பணியிலீடுபடுகின்றன!

பிரச்னைகளை, பிணக் குழியில் போட்டுவைக்கவும்—வீண் பழியை நம்மீது வீசவும், தோள் தட்டுகின்றன, இந்தத் துந்துபிகள். இந்த அரசாங்கம், செய்யும் காரியத்தை எதிர்க்கிறோம்—காரணம், ஆச்சாரியார், பார்ப்பனர் என்பதாலாம்!

தி. மு. க. பிறந்தது முதல், இந்தப் பார்ப்பனர் – பார்ப்பனரல்லாத பிரச்னையில் உண்டாகி வந்த சுமுகத்தை நாடு அறியும். காஞ்சி போன்ற இடங்களில் பார்ப்பன இளைஞர்களே நடத்தும், நமது கிளைக்கழகங்கள், பதில்கூறும். எனினும், கூறுகின்றன, இவ்விதம்!

ஆச்சாரியார், நெசவாளர்களை ஆதரித்தார்—நாம் தோளில்சுமந்து வீதி வீதியாக விற்றோமேயொழிய, "ஐயோ! ஆரியரும் ஆதரிக்கிறாரே" என்று இருந்துவிடவில்லை. 'கல்கி' இதழே; பாராட்டி எழுதும்படியான அளவுக்கு பணிபுரிந்தோம்.

எனினும், கூறுகின்றன ஏடுகள்!

இந்நிலை நுழைத்தார் முன்பு நண்பர் அவினாசிலிங்கம் — அவர் ஒரு திராவிடராயிற்றே, என்று எதிர்க்காமலா இருந்தோம்? என்னென்ன நடைபெற்றது, சென்னையில்! ஓமந்தூரார் இருந்தார்—அதற்காக விட்டாக்கொடுத்தோம்? "ஓமந்தூரார் பார்ப்பனரல்ல — ஆகவே, கும்பகோணத்தில் 144 போட்டால் மீறக்கூடாது" என்றா இருந்தோம். குருதியன்றோ, ஓடிற்று குடந்தை வீதிகளில்.

விசித்திரமான கண்டுபிடிப்பு — வேதனையை வீசிய வண்ணம் வேலையும் சொருகுகிறது—ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித்திட்டத்தை நாம் எதிர்ப்பதும், அதனை அவர் கைவிட வேண்டுமென்று சட்டசபை நடைபெறும் நாட்களில் அவர் வீட்டின் முன்மறியல் செய்வதும் — அவர் மீதுள்ள, ஆத்திரத்தினால்தானும்! சென்னை அறப்போர் மட்டுமல்ல—ஜூலை 15 நிகழ்ச்சியும், ஆச்சாரியார் மீதுள்ள ஆத்திரத்துக்காகவே, நடத்தப்பட்டதாம்.

'மவுண்ட்ரோடு', ஏடுகள் மார்தட்டிக் கிளம்புகின்றன — வீண் பழியையும் சதிகளையும் நம்மீது வீசி, ஆச்சாரியாரின் ஆட்சிக்குப் பலம் தேடமுற்படுகின்றன. அதன் ஒரு காட்சிதான், தூத்துக்குடியில் 'யாரோ' செய்ததாக வரும் செய்திகளை, வேதனையை அனுபவித்த நம்மீது, வீச முயல்வது!

தோழர்காள்!—எதிரி, அஸ்திரங்களையல்ல, பிரயோகிக்க முற்படுவது — தந்திரத்தை!! எனவே, ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

நம் அறிவுப் பணிக்காணப் பெருந்தோர், இன்று 'தந்திர' முறைகளைக்கையாள முயலுகின்றனர் — ஆட்சி அதிகாரத்தைத் தமதிஷ்டத்தை நிறைவேற்றப் பயன் படுத்திக் கொள்ளலாம் எனும் பேராசையோடு.

கெடுமதியினர் குறித்து, கிஞ்சித்தும் கவலைப்பட வேண்டாம்! கடமையைச் செய்யுங்கள்!!

நமது இலட்சியம், ஆண்டானும் அடிமையும், உயர்ந்தவனும் தாழ்ந்தவனும் இல்லாத, இன்பத்திராவிடம் உருவாக வேண்டுமென்பதுதான்.

இதனைக் கவனத்தில் வைத்து, பணிபுரியுங்கள்! நமதுபொதுச்செயலாளர் அடிக்கடி கூறியிருப்பது போல, "தனிப்பட்ட நபர்கள் அல்ல முக்கியம்— அவர்களது நடவடிக்கை எவ்வளவு தூரம் சமுதாயத்தைபாதிக்கிறது என்பதுதான்" ஆகவே அமைதியோடு,பணிபுரியுங்கள். பொறுப்பான நேரம்—பொன்னான கட்டம். கவனத்தில் வையுங்கள்!

*

வீர வணக்கம் செலுத்துகிறோம்!

'கல்லக்குடி' — இந்த எழுத்துக்கள் பதித்த போஸ்டரை ஒட்டிவிட்டு, திரும்பிப் பார்க்கிறார், செயல் வீரர் கருணாநிதி. கரத்திலே கழகக் கொடி! முகத்திலே வீர ஒளி!!— இதோ, காட்சிதருகிறார், தோழர்.

அவர் ஒட்டிய 'போஸ்டர்' பெருமிதமாகக் காட்சி தந்தபடி இருக்கிறது — டால்மியாபுரமெனும் வடநாட்டு ஆதிக்கச்சின்னத்தை அழித்தபடி. ஜூலை 15 முதல் காட்சியளிக்கிறது! கர்ஜித்து, துப்பாக்கி தூக்கிப் பதினெரு உயிர்களைப் படுகொலை செய்த, ஆச்சாரியார் அரசாங்கம், அதனைக் காவல் காத்து நிற்கிறது!! தினசரி அறப்போர் வீரர்கள் 25 பேர் பாசறையினின்றும் கிளம்பி, கரங்களில் கழகக்கொடியேந்திய வண்ணம் அணிவகுத்தபடி சென்று, 'கல்லக்குடி, காட்சியளிக்கிறதா?' என்று சரி பார்த்துவிட்டு—கிழிந்த இடங்களை மீண்டும் ஒட்டிவிட்டு— 'திராவிடநாடு திராவிடருக்கே! வடநாட்டாதிக்கம் ஒழிக!!' என்றுபெரு முழக்கமிட்டவண்ணம், திரும்புகின்றனர்—இந்த அறப்போர், அட்டகாசத்தார்பாரிலிருக்கும் டில்லி பீடம் அசைந்து கொடுக்கும் வரை, நடைபெறவேசெய்யும். முறைகள்—மாறலாம். வீரர்கள் எண்ணிக்கை—அதிகமாகலாம். 'டால்மியாபுரம்', 'கல்லக்குடி'யாகக்காட்சியளிக்கவேண்டுமென்னும் பொறுப்பை, திருச்சி தீரர்கள், செய்து கொண்டேயிருப்பர். விசித்திரமான, அறப்போர்!— எனலாம், தோழர்கள். ஆமாம், அமைதியும் சாந்தமும் நிரம்பிய எந்த அறப்போரும் விசித்திரம் போலத்தான் காட்சிதரும். காந்தியார், 'சத்யாக்ரகம்' துவக்கியபோது வெள்ளையன் ஏளனம், செய்தான். ஆனால், விளைவு என்னவாயிற்று? காந்தியார் பாதையில் செல்வதாகக் கூறும் காங்கிரஸ் ஆட்சி, 'விசித்திரமான' இந்த அறப்போரைக் கண்டுதான், வேதனைகளைக்கொட்டுகிறது, நம்மீது. டால்மியாபுரம் ஒழிந்து கல்லக்குடியாகவேண்டும்!-இந்த முழக்கத்திலுள்ள முழுப் பொருளையும் அறியாதார், 'இதற்கு ஒரு கிளர்ச்சியா?' என்று, சொல்லுகின்றனர். ''சாதாரணப் பெயர் மாற்றவிஷயம்'' என்கிறார், ஆச்சாரியார். ஆனால், இந்த 'அற்பமான' விஷயத்துக்கு, திராவிடம் இழந்திருக்கும் உயிர்களின் பட்டியல் 11! காயமுற்றோர் எண்ணிக்கை சுமார் 100 !! சிறைக்குள்ளே கிடப்போர் 3000 !!!

பெயர் மாற்றும் போராட்டம்—சாதாரண எழுத்துக்களை மாற்றும் போராட்டமல்ல; அது, ஓர் எச்சரிக்கைப் போராட்டம்.

வளர்ந்துவரும் விடுதலை முழக்கத்தின் அளவை நேரு பீடத்துக்கு எச்சரிக்கும் போராட்டம்.

எனவேதான், இது விஷயத்தில், நமது அறப்போர் வீரர்கள், அவ்வளவு ஆர்வத்தைக் காட்டுகிறார்கள்.

இதன் உண்மையை, அரசாங்கம் நன்கறியும். ஆயினும், அதனை ஒப்புக்கொண்டுவிடலாமா? —அரசாங்கத்தின் அந்தஸ்து என்னவது! அதனால்தான் ஆச்சாரியார், அதன் முக்கியத்துவத்தை, மூடி மறைக்கிறார்!! அற்பமான தாம்—ஆனால், அதனை நிறைவேற்றிய தோழர் கருணாநிதி எங்கே? 'சிறைமேலை செய்தாய்! செல்— இங்கென்ன வேலை?'— என்று விட்டிருக்கிறது, அரசாங்கம். இதோ! திருச்சி மத்திய சிறைக்குள்ளே, கைதி உடையில்—நெடுங்காவல் தண்டனையை அனுபவிக்கச் செய்து கொண்டிருக்கிறது. பெரியதோர் கட்டில்! உள்ளே கல்விகொண்டிருக்கிறார், அவர்.

கருணாநிதி! — இந்தச் சொல் வலிபட்டவைக்கு, கருப்பு! இளைஞர் பட்டாளத்துக்கு, உரிமை வாளைத் தயாரிக்கும் இரும்பு! ஆனால் இன்று, ஏறு நடை போட்டு, எக்காளம் எழுப்பும் அச்செல்வன்— செயல் வீரன் இருக்குமிடம்? ஐயோ! நெஞ்சம், நெருப்பாகிறது.

பெரியதோர் மகிழ்ச்சி — ஆச்சாரியாரின் உள்ளத்திலே எழும்பியிருக்கும் அதிகார வெறியைப் போல. உள்ளே கருணாநிதி! வெளியே நாம்!!

திருச்சிச் சிறைக்குள்ளே அவர் ஒருவர்மட்டுமா? அல்ல! அல்ல! மீசை அரும்பாத இளம் வாலிபர்கள்—தலை நரைத்துப் போன தள்ளாத வயதினர்—தாயின் முகத்தையும், தாரத்தின் அன்பையும், குழந்தையின் மழலையையும் நினைத்தபடி, சிறைக்கோட்டத்துக்குள்ளே சுற்றிச் சுற்றி வலம் வந்தபடியிருக்கும் 'குடும்பச் சுமை தாங்கியோர்' —இவ்வண்ணம் 500 பேர் வரை உள்ளனர்.

திருச்சிக் கணக்கு, ஐந்நூறு—மதுரைக் கணக்கு எழுநூறு! திருச்சி, மதுரைமட்டுமா? வேலூர்-சென்னை இன்னும் எங்கெங்கு 'சப்ஜயில்கள்' உள்ளனவோ, அங்கெல்லாம் ஆயிரக்கணக்கான தோழர்கள்.

கழனிக்குச் செல்வோர். காடு மேடு திருத்துவோர், பேனா பிடிப்போர், கூலி வேலை செய்வோர், வண்டி இழுப்போர், முதுகு ஒடிய மூட்டை தூக்குவோர், இவ்வண்ணம் உழைத்து வாழவேண்டிய கூட்டம், உல்லாச வானம்பாடிகளாய், தாயகமண்மீது ஓடியாடி உலவிய கூட்டம், நாற்புறமும் மதில் வளைக்க, நடுவிலே அதிகாரிகள் வட்டமிட, ஆந்தையின் பொந்துகள்போன்ற சின்னஞ் சிறு அறைகளுக்குள்! பசித்தால், சாப்பிட முடியாது! படுத்தல், உறங்க வழியில்லை! இஷ்டமான உடைகளை உடுக்கமுடியாது! இந்த நிலையில், கூண்டிற் சிக்கிய புலிகளாய்க்கிடக்கின்றனர். தென்னாடு முழுமையுமுள்ள சிறைகளெல்லாம் எதிர்கால உலகமாம், அரும் தியாகிகள் உலவும் கோட்டமாகி இருக்கின்றன. தாயகமே, என் உயிர்! விடுதலைக்காகப் போராடுவேன்!-என்று வீர முழக்கம் செய்வோரை, இழுத்துச் சென்று பூட்டுகிறது, கடுங்காவல்! கைதி உடை!! நாட்டின் விடுதலை வீரர்களை இழுத்துவந்து பூட்டுவதற்காக, கள்ளனையும் காமுகனையும், குடிகேடனையும் கன்னக்கோலனையும், திறந்துவிட்டுவிட்டு, சிறையின் கதவுகளைத் திறந்துவைக்கிறார்.

வித்விதமான சட்டங்கள்! விசித்திர விசித்திரமான தண்டனைகள்!! -தினசரி, சிறைக்கதவு திறக்கிறது; மூடுகிறது.

மக்களைக் கொண்டு போய், கூட்டம் கூட்டமாகக் கொடுமைப் படுத்தவேண்டிய அளக்கு, அந்த மக்கள் செய்த குற்றம் என்ன? —இந்தப் புகைப்படத்தைப் பாருங்கள்! — இந்தக் குற்றம்தான் கோரவாய் திறந்தது போல் காட்சிதரும் என்ஜின்களைக் கண்டும், பயப்படாது, அதன் எதிரே போய்ப் படுத்துக் கொண்டதுதான்—வடநாட்டாதிக்கம் எவ்வளவு கோரமானது என்று தெரிந்தும், அதனை எதிர்க்க, அறப்போர் வீரர்கள், வீறுகொண்டெழுந்ததுதான் உரிமைகொடு! — இந்த முழக்கம் எழுப்பினர்.

சிறைவாசம், இந்தா! — பரிசு, தருகிறது, டில்லிபீடம். உயிரிழந்தாவது, விடுதலை பெறுவோம்— எச்சரிக்கை விடுத்தனர், வீரர்கள். இவ்வளவு ஆட்டிப்படைத்தும் இன்னும் உன் உடம்பில் வீர இரத்தம் இருக்கிறதா? இதோ, உறிஞ்சுகிறேன். போ, சிறைக்கு—மிரட்டித் தள்ளுகிறது, அதிகாரபீடம்.

எதிரே நிற்கும், என்ஜின் உருண்டால் உடல் துண்டு துண்டாகலாம். கவலையில்லை!—என்று, தமக்கு, வடநாட்டாதிக்கத்தின் மேலுள்ள ஆத்திரத்தைக் காட்டிக் கொண்டனர், தோழர்கள். அவர்களின் சுதந்திரவேட்கையைக்கண்ட 'சுதந்திர சர்க்கார்' தூக்கியெறிகிறது, சிறைச்சாலைக்குள்.

ஒரு நாட்டின் விடுதலை ஏட்டில், சிறை! துப்பாக்கி! குண்டு முழக்கம்! —எனப் பலப்பல அத்தியாயங்களுண்டு. அதேபோல—கலவரம்—தீவைக்கப்பட்டது—அதிகாரிகளைத் தாக்கினர்—பாங்குகள் கொள்ளை— என்கிற பட்டியலும்முண்டு.

இந்த 'அத்யாயத்தையோ' 'பட்டியலையோ' தொட்டும் பார்க்காதவர்கள், நம் தோழர்கள். தன்னை இழந்தாவது தாயக விடுதலையைப் பெறுவோம் எனும் புதுவழிகண்டவர்கள்! அந்தப் புத்தொளிகளைத் தான், சிறைக்குள்ளே போட்டு சித்திரவதைசெய்கிறது அரசாங்கம்.

ரயிலின்முன், ஏன், போய் படுக்கவேண்டும்?—சிலரின், கேள்வி, இது. வேறுவழியில்லையா?—வேறு, சிலரின், கேள்வி இது.

பொதுஜனங்களுக்கு இடையூறு உண்டாக்குமே!—இன்னும் சிலரின், சந்தேகம்.

இவை யாவும் ஏற்படக்கூடிய சந்தேகங்கள்தான். வடநாட்டு ஆதிக்கத்தின் கவனத்தை எளிதிலே கவர ஏராளமான மார்க்கங்கள் உண்டு— முன்பு குறிப்பிட்டிருக்கும் 'அத்தியாயத்திலும்' 'பட்டியலிலும்' பல வழிகள் இருக்கின்றன. ஆனால், உள்ளத்தை மனித தியாகத்தால் திறக்க விரும்புகிறது, தி. மு. க.

இரத்தம் குடித்து, எண்ணங்களை நிறைவேற்றும், இழிமதிகொண்டதல்ல, தி. மு. கழகம்.

எனவேதான், சர்க்காருக்கோ, பொதுமக்களுக்கோ இடையூறில்லாத ஒரு முறையைத்தேர்ந்தெடுத்தது.

சங்கிலியைப்பிடித்து இழுப்பது— என்பதுவே, இந்த முறை.

இதன்படி செய்தால், ரயில்கள், தாமதமாகலாம் — ரயில்களோ டில்லியின் கட்டுப்பாட்டிலிருப்பவை— டில்லிக்குத் தகவல் கிடைத்தால், 'ஏன் அப்படிச் செய்தனர்?' என்று கேட்பார்கள் — நேருவுக்கு நம்மு



டைய கண்டனம் விளங்கும்—இது தான், அதன் நோக்கம்.

ஆனால், இதனை நிறைவேறவிடவில்லை—ஆட்சியாளர். அபாய அறிவிப்புச் சங்கிலியையெல்லாம், பல இடங்களில் உடைத்துவிட்டனர்—இன்னும் பல இடங்களில் வேறு பல தந்திரங்களைக் கையாண்டனர்.

இதனைக் கண்டதாலேயே அறப்போர்த்தோழர்கள் அவர்களுக்கென உதித்த மாற்றுவழியைக் கடைப்பிடித்தனர்—அதுதான் தண்டவாளத்தின்மீது படுப்பதென்பது.

'படுப்போம். ஏன், என்று கேட்பார்கள். ஐயா! டில்லிபீடம், நீங்கள் எது சொன்னாலும் கேட்பதில்லை. ஒரு வருடத்துக்கு முன்பு, டால்மியாபுரம்எனும் ஊர்பெயரைக் கல்லக்குடியாக மாற்றுமாறு வேண்டினோம் கவனிக்கவில்லை — தென்னாட்டு மக்கள் எது செய்தாலும் இழிசொல் வீசி ஏசுகிறார், டில்லித் தலைவர் நேரு. எமதுகோரிக்கையை உணர்த்தவும், கண்டனத்தைத் தெரிவிக்கவுமே, தண்டவாளத்தில் கிடக்கிறோம் என்று கூறலாம். செய்திகள், டில்லிக்குப் போகும்—ஒரு நாள் ரயில்கள் தாமதம் ஆயிற்று என்றால் நிச்சயம்நமது கோரிக்கை டில்லியின் கவனத்தைத் தொடும்!'' எனக் கருதினர், அறப்போர் வீரர்கள்.

அன்புள்ளத்தோடு, அவர்கள், எண்ணினர்.

அரசாங்கமோ, வெறிக் கண்களோடு, அவர்களைப் பார்த்தது.

விளைவுதான், இக்காட்சி! ரயிலுக்கு மத்தியில் தோழர்களை விட்டு விட்டு தூக்கித் தூக்கி அடித்தனர்—அடிமட்டுமா? துப்பாக்கியும் ஏந்திச் சுட்டனர்! 'ஐயகோ, என்ன கொடுங்கோன்மை, இது?' என்று நாடு, அலறுமளவுக்குச் சுட்டனர்!

''சுட்டுப் பொசுக்கிய தோடு விடுவேன் என்று எண்ணுகிறாயா? பார்! இதோ சிறைச்சாலை!'' என்று அறப்போரிலீடுபட்ட ஆயிரக்கணக்கான தோழர்களையும், சிறைக்குள்ளே, பூட்டி சித்திரவதை செய்கிறது அரசாங்கம்.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமைமாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்ற கீதம் கேட்டுக் கேட்டுப் பழக்கப் பட்டவர்களல்லவா, நமது தோழர்கள். ஆகவே, கூட்டம் கூட்டமாகச் சென்று நிரப்பு இடமில்லாததால், 'கைதி'களுக்கெல்லாம், விடுதலை வழங்கி விரட்டுகிறது!!

கேவலமான போக்கைத்தன் 'கித்தாப்புக்காக' வைத்திருக்கும் இந்தக் கேடு கெட்ட அரசாங்கத்தின் போக்குக் கண்டு, உலகம், கேவலமாகப் பார்க்கிறது.

மக்களின் ஜனநாயகக் குரலைக் கேட்காத ஆட்சியின் தலைவரா, இந்தப் பண்டித நேரு?—என்று, பரிகாசம். செய்கிறது.

உலகின் கேலி! — பண்டிதரின் உள்ளத்தை மிக மிகச் சுட்டிருப்பதால்தான், 'உலகம் கேலிசெய்கிறதே!' என்று லட்சுமண புரியில் பேசிய போது, அலறியிருக்கிறார்.

ஜூலை 15—ஒரு நாள், நமது அமைதியான அறப்போரை, இரத்தக் குளத்தால் கழுவி, என்றும் மாறாததாக ஆக்கிவிட்டனர், ஆட்சியாளர்.

11 தோழர்கள் பலி!—சிறுகோரிக்கையை ஏற்றுக் கொள்ளாத் 'திமிர்' பிடித்தஆட்சிக்கு, 11 உயிர்கள்பலி!!

இந்தப் 'படுகொலை' — வளர்ந்து வரும் நாம் எதிர்பாராததே எனினும் தாங்கிக் கொள்வோம். ஆச்சாரியார் ஆட்சிப் பீடத்திலிருக்கும்போதெல்லாம், பிணங்களை'த் தரும் 'பெருஞ்செயலை'ச் செய்யத் தவறுவதில்லை. இந்தி எதிர்ப்பின் போது இருபிணங்களைத் தந்தார்!—இன்று, நாம் எங்கும் பரவியிருக்கிறோம்.

இப்போது, பதினொரு பிணங்களைத் தந்திருக்கிறார் — வழியும் கண்ணீரைத்துடைத்துக் கொள்வோம் — பிணங்களாக்கப்பட்ட அந்த வீரர்களையெண்ணி, நமது வணக்கங்களைச் செலுத்திக் கொள்வோம்.

நாம், நமது தோழர்களை இழந்தோம்.

டில்லிபீடம், தன் கவுரவத்தையே இழந்து விட்டது.

ஒருநாள்—அப்பப்ப! என்னபாடு படுத்திவிட்டது, ஆட்சித் தர்பார்.

அதற்குப் பலியாகிய 11தோழர்களுக்கும், சிறைக்குள்ளே அடைபட்டுக்கிடக்கும், மூவாயிரத்துக்கு மேற்பட்ட தோழர்களுக்கும் சிரம் தாழ்த்தி நமது வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்வோம்.

வீரர்காள்!—நீங்கள் சிந்திய இரத்தத்துளி, எம் இதய ஜோதியைக் கொழுந்துவிட்டெரியச் செய்கிறது.

நீங்கள் காட்டிடும் தியாகம்—தாயகத்தின் கண்களில் புது ஒளியை உண்டாக்கியிருக்கிறது.

வாழ்க நீங்கள்! வளரட்டும் நம் கோள்கை!!

என்றுதான் மாறுமோ?

கழுத்தில் கட்டியுடனிருந்த மாட்டை, வண்டியில் பூட்டி ஓட்டி வந்தான் என்பதற்காக என் நண்பன் நாராயணனைக் குற்றம் சாட்டி அபராதம் செலுத்தச்செய்தார்கள், மிருகவதை ரட்சகர்கள்.

தண்டனை செலுத்திய ரசீதைக் காட்டி, மாட்டை ஓட்டிவிடும்படி கேட்டான்—அந்த மிருகவதை ரட்சகர்களை.

அவர்களோ, மூன்று ரூபாய் எங்களுக்குக் கொடுத்தால் மாட்டை நீ ஓட்டிக்கொண்டு செல்லலாம். இல்லாவிட்டால், 'ஆபரேஷன்' செய்வோம்; பத்து நாட்களுக்கு இங்குதான் நீ இருக்கவேண்டும் எனப்பயமுறுத்தினர்.

எப்படியாவது ஊருக்குப் போய் விடவேண்டும் என்ற எண்ணத்திலிருந்த நண்பன், மூன்று ரூபாய் கொடுத்துவிட்டு, மாட்டை ஓட்டிச் சென்றுவிட்டான்.

இதிலே நாம் குறிப்பிடவந்தது, இலஞ்சம் வாங்கிக்கொண்டதைப் பற்றிகூட அல்ல—இந்த இலஞ்சப்பேய் பெரிய பெரிய மேலதிகாரிகளிடமே சர்வ சாதாரணமாக நடைபெற்றுக்கொண்டுள்ளனவே!

மிருகவதை ரட்சகர்களாயிற்றே! இவர்கள்! அதற்காக அல்லவோ! இவர்கள் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? மீண்டும் அந்த மாடு வண்டியில் பூட்டப்பட்டு அவதிபடாமலிருக்க, 'ஆபரேஷன் செய்து சிகிச்சை செய்தல்லவோ அனுப்பியிருக்கவேண்டும்.

ரட்சகர்கள் இவர்கள் — மிருகங்களுக்கு. ஆனால், அது மீண்டும் அவதிபடட்டும் என்று விட்டுவிட்டார்கள். பாதுகாவலர்கள்—பிராணிகளுக்கு! என்றும் பதைக் கட்டுமே என்று அனுப்பிவிட்டார்கள். காக்கவேண்டிய காவலர்கள், இவர்கள்!—எனினும். கால்நடை கஷ்டப்பட்டால நமக்கென்ன கைக்கூலி வந்தால் போதுமென இருந்துவிட்டார்கள்.

இப்படிப்பட்டவர்களை நம்பியிருக்கும் கால்நடைகள் வதைபடுவதைத் தவிர வேறென்ன இருக்கமுடியும்!

இவ்வளவு ஆசாபாசத்துக்குட்பட்ட மனிதனின் செயல் [illegible] கைக் கூலி பெற்றுவிட்டான்—கடமையை மறந்து விட்டான்.

இதோ ஒரு செய்தி. மக்களைக் காக்க வேண்டிய மாகாளி, கைக்கூலி பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்ல, பக்தனின் ஆசையையும் நிறைவேற்ற வில்லை.

கட்டுக்கதை என்று எண்ணிவிடதிர். மேலே கூறிய செய்தி பத்திரிகையில் வராதது, ஆனால் இது பத்திரிகையில் வெளிவந்தசெய்தி—சுதேசமித்திரன் 21—7—53-ல் வெளிவந்தது.

பக்தன் ஒருவன்—சந்து என்பவன் காளியின் அருளைப் பெற்று மோட்சலோகம் அடைய எண்ணினான். காளியின் மனதைக் குளிர வைக்க வேண்டுமல்லவா! மோட்சலோகம் எளிதில் கிடைப்பதற்கு!

காளியின் அருளைப் பெறுவதென்றால் இன்னின்ன முறைகளைக் கையாள வேண்டும். என மார்க்க போதகர்கள் கூறியிருக்கும் மார்க்கங்கள் அவன் மனக்கண்முன் வந்து தோன்றின.

சிறுத்தொண்டனை சிவனார் பிள்ளைக்கறி கேட்ட பொழுது, தன் மகன் சீராளனின் ஞாபகம் வெகு சீக்கிரமாக வந்தது, அவனைக் கொன்று கறி சமைத்தான் என்று, பெரிய புராணம் கூறுகிறதல்லவா—அதுமட்டுமல்ல, மைந்தனைக் கொன்ற அவரை மகாபக்தர்களின் பட்டியலில் சேர்த்து நாயனார் என்று நற்பட்டம் சூட்டவில்லையா—நம்மவர்கள்—மதத்தலைவர்கள்.

அதைப்போல, இந்தப் பக்தனுக்கும், காளிக்குக் காணிக்கை செலுத்த, தன் இரண்டு வயது பெண் குழந்தை கவனத்துக்கு வந்தது.

பெற்ற மகளென்றும் பார்க்கவில்லை, அந்தப் பேயன்—அவ்வளவு மூடபணி அவனது உள்ளத்திலே ஊறியிருந்தது.

கோயில் பலிபீடத்திலே தேங்காயை ஓங்கி அடிப்பதைப்போல்—ஆச்சாரி சர்க்காரின் துப்பாக்கி வேலை செய்வதைப் போல் அடித்தான்—இரத்தம் பீறிட்டோடியது.

பீறிட்டோடிய ரத்தத்தை வழித்தெடுத்தான் பக்தன்! காளியின் சிரசுக்கு அபிஷேகம் செய்வித்தான். தானும் நெற்றியில் வீர திலகம் இட்டுக் கொண்டான்.

பலியை ஏற்றுக்கொண்ட, அந்த காளிபக்தன் அபிலாஷித்த மோட்ச லோகத்துக்கு அழைத்துக்கொண்டாளா? அதுதான் இல்லை.

கூலி பெற்றுக்கொண்டும்கூட அந்தக் காளி கருணை காட்டவில்லை—அவனைக் காப்பாற்ற முன்வரவில்லை.

மக்களின் தாய் அவள்! — மதத் தலைவர்களின் கூற்றுப்படி. மக்களைக் காக்கவேண்டிய அவள், தன் குழந்தைகளில் ஒன்றை பலி ஏற்றாள்! மற்றொருவனை தூக்குக் கயிற்றிலே தொங்கவிடுகிறாள். இவளா தாய்? இதுதானா மக்களைக்காக்கும் செயல்?

இப்படிப்பட்ட கடவுள்கள் நமக்கு ஏன் வேண்டும்? மூடப் பழக்கவழக்கங்கள் முறியடிக்கப்பட வேண்டும்என நாம் கூறினால், 'நாஸ்திகர்கள்' என நவிலும் ஆஸ்திகர்கள் சற்று ஆய்ந்து பார்க்கட்டும்—இந்த அக்கிரமச் செயலை.

அவன் மனதிலே, எந்த அளவுக்கு மதபோதனை ஏறியிருந்தால், மகளென்றும் பாராமல், கொன்றிருப்பான்! இந்த கோரநிகழ்ச்சிக்கு அவனா காரணம்? அவனுடைய மனதிலே புகுத்தப்பட்ட எண்ணங்களல்லவா, அவனை இச்செயலைச் செய்யத் தூண்டியது!

ஆனால், தூண்டியவர்கள், அவனைத் தூற்றுவது, தெரிகிறது!

பாப காரியத்தைச் செய்த பாபி என்றல்லவா தூற்றுகிறார்கள். அந்தப் பாப காரியத்தைச் செய்யத் தூண்டியது எது? பக்தி! பக்தி போதையினர், தங்கள் போதையினின்றும் தெளிந்து இதற்கு பதிலளிக்கட்டும்.

கைக்கூலி பெற்றுக்கொண்ட மிருக ரட்சகர், மாட்டைக் காப்பாற்ற வழியைச் செய்யவில்லை.

காளியோ, குழந்தையைப் பலி கொண்டும் பக்தனைக் காப்பாற்றவில்லை.

மாக்களைக் காப்பாற்றும் அதிகாரிகளும் இப்படி!

மக்களைக் காப்பாற்றும் மாகாளியும் இப்படி!

இவர்களையெல்லாம் நம்பியுள்ள மக்களோ?—இன்னும் மடைமை மாத்தைக் காப்பது கடமை என எண்ணி உழல்கின்றனர்.

இந்த நிலை என்றுதான் மாறுமோ?

தினமணியும்-கழுதையும்

மலத்திலே உருண்டு உருண்டு வாழ்ந்தது, வண்டு! சிரங்கைக்கவ்வி செந்நீரைப் பருகி, சீழுக்கு அச்சாரம் கொடுத்தது, கிருமி. படுக்கையின், ஓரத்திலே, பாயின், மூலையிலே, சுவரின் ஓட்டையிலே, சந்திலே ஒளிந்து கிடந்தது, மூட்டைப் பூச்சி. சாக்கடையை மொய்த்துக்கொண்டு சங்கராபரணம் பாடிற்று, கொசுக் கூட்டம். குப்பையிலே குடித்தனம் செய்தது, ஈ. சுடுகாட்டிலே சுற்றிற்று, நரி. பொந்திலே கிடந்தது, ஆந்தை. சேற்றிலே புரண்டது, நத்தை. செத்தையிலே வாழ்ந்தது, புழு. பாசி படிந்த குட்டையிலே படுத்துப் புரண்டது, எருமை. கூரையில்லா வீட்டிலே குடித்தனம் செய்தது, கழுதை!

அவைகளுக்கு ஒவ்வொரு இடமும் தொழிலும் கிடைத்துவிடுகிறது: செய்துகொண்டு காலங் கழிக்கின்றன. அதைப்போல மனிதப் பிறவிகளிலே சில, மலமுருட்டும் வண்டாக, சீழ்குடிக்கும் கிருமியாக, சேற்றில் புரளும் நத்தையாக உள்ளன. என்ன செய்யும் பாவம்! அவைகளுக்குத் தெரிந்த தொழில் அதுதான். அதைக்கொண்டுதான் வாழமுடியும். வாழ்ந்துவிட்டுப் போகட்டும், நமக்கொன்றும் வருத்தமில்லை. அந்தந்த தொழிலை அவை செய்துகொண்டிருப்பதை நாம் ஏன் தடுக்க வேண்டும். நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், வாலைக் குழைத்துக்கொண்டு, அது ஓடித்தானேபோகும்.

எந்தக் குட்டிச்சுவரண்டையாவது கழுதை கிடக்கட்டும், காம்போதி கானம் இசைக்கட்டும். ஆனால், நமது வீட்டுவழி வரக்கூடாது. அதைப்போல, பேனா பிடித்தது பிழைப்புக்கு, கொள்கைக்கு அல்ல, என்று வாழ்பவர்கள்—மாஞ்செடி முளைக்க வைக்கிறேன் என்று கூறி ஜாலங்காட்டிப் பிழைப்பதுபோல, அந்தப் பேனாவைக்கொண்டு எதை வேண்டுமானாலும் எழுதிப்பிழைக்கட்டும். ஆனால், நம்மைக்கிண்டல் செய்து கண்டபடி எழுதினால் இதன் கொட்டத்தை அடக்கி மட்டந்தட்டி, குட்டிச்சுவரருகில் கொண்டு வைத்துவிடுவோம்— இந்தக் கோணல் சேட்டைக்காரர்களை.

வயிறு எரிகிறது போலும் இந்த 'வக்கிரத்'துக்கு. காங்கிரஸ் காங்கிரஸ் என்று கத்தியும், காங்கிரஸ் கண்ணியம் காற்றில் பறப்பதைப் பார்த்து—காங்கிரசின் எதிர்ப்பு பலமாவதைக் கண்டு, கோவெனக் கதறிக் கண்டபடி எழுதுகிறது, 'தினமணி.'

15—7—53-ல் தென்னாடெங்கும் நடைபெற்ற இரயில்வே நிறுத்தப் போராட்டத்தைக் கண்டு மனம் வெம்பிய 'தினமணி' ஒரு சரடு கட்டி, அதற்குச் சுற்றிலும் பார்டர் கட்டி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

"ரயில் நிறுத்தம், கழுதையும் கலந்து கொண்டது" என்று தலைப்பிட்டு. 'கண்டமங்கலத்தில் தண்டவாளங்களுக்கு நடுவில் ஒரு கழுதை நின்று கொண்டிருந்தது. ரயில் நிறுத்தப்பட்டது. யாரோ வண்டியை நிறுத்திவிட்டார்கள் என்று ஆவலோடு எதிர்பார்க்க, விபரம் தெரிந்து கழுதையை ஓட்டிவிட்டு மீண்டும் ரயில் கிளம்பியது"

என்று 'தினமணி' எந்த பத்திரிகையிலும் வெளிவராத ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

கழுதையே தண்டவாளத்தின் மீது நின்று கொண்டிருந்ததாகவே வைத்துக் கொள்வோம். மாடு, ஆடு எருமை முதலிய மிருகங்கள் தண்டவாளத்தின் மீது நிற்பது சகஜந்தான், ரயிலை நிறுத்தி, அவைகளைத் துரத்தி விட்டு ரயிலை ஓட்டிச் செல்வதும் நடைபெற்றுக் கொண்டிருப்பவை தான்.

ஏனோ, தினமணி, அந்தக் கண்டமங்கலத்துக் கழுதையின் மீது காதல் கொண்டு முக்கியத்துவம் கொடுத்துப் போட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட செய்தியைப் போடுவதன் மூலம், தினமணி இரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நம்மை, கழுதையோடு ஒப்பிடுவதாக எண்ணிக்குதிக்கிறது போலும்.

"கழுதையை நிற்க வைத்தாலும் காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்" என்று கூறிய காங்கிரசின் அங்கமல்லவா தினமணி— அதற்கு எப்படிக் கழுதைப் புத்தி போகும்.

'கழுதையின் குரல் கேட்டால், நல்ல சகுனம்' என்று நினைவு கொண்டிருக்கும் கூட்டத்தைச் சேர்ந்ததல்லவா! எனவே, கழுதையும் ரயில் நிறுத்தம் செய்தது என்று தன்னுடைய நல்ல சகுனக் குரலில் கூறுகிறது—தினமணி.

தண்டவாளத்தைப் பெயர்த்து, தந்திக் கம்பியை அறுத்து, தபாலாபீசைக் கொளுத்தி, திராவகத்தை அதிகாரிகளின் முகத்தில் வீசிய செயலினைச் செய்தது அகிம்சை என்று எண்ணிக்கொண்டிருக்கும், காந்தத்தற்ற சுபோதிக் கூட்டத்தைச் சேர்ந்த தினமணிக்கு ரயில் நிறுத்தப் போராட்டம் கிண்டலாகப்படுவதில் ஆச்சரியமில்லை.

கழுதையை முன்னிறுத்தி, அதன் பின்னால் தன் கருத்தைக் கூறிவரும் தினமணியாரே!— கழுதைதான் தங்கள் கண்ணிலும் கருத்திலும் பட்டது போலும்!

ஊரைவிட்டு, வீட்டைவிட்டு, வாசலைவிட்டு, ஆணும் பெண்ணும், குழந்தையும் கிழமும், வானத்தைக் கூரையாகக்கொண்டு, வரண்ட நிலத்தை வீடாக்கி, வாழும் மக்களின் கூட்டமும்—அவர்களின் உடம்பிலே காணப்படும் புழுதியும், காய்ந்த தலையும், எலும்புந் தோலுமாக இருக்கும் கோரமும், ஒட்டிய வயிறும், உலர்ந்த உதடும், மிரண்ட கண்களும், குழிவிழுந்த கன்னங்களுமாக நாட்டில் நடமாடி நலிந்து மடியும் பட்டினிப் பட்டாளங்கள் தினமணியார் கண்ணில் பட்டதே இல்லை எனவோ, இவை குறித்து அது எழுதுவதில்லை. அதன் கண்ணுக்குக் கழுதை தெரிகிறது — குரங்கு ஆடிய ஆட்டம் தெரிகிறது.

அந்த இனத்திற்கு இதை தவிர்க்க முடியாது — மனிதாபிமானத்தை மறந்துவிட்டது— மக்களுக்குப் பாடுபடும் மார்க்கத்தை விட்டுவிட்டது — விலங்கினத்திற்கு வேகமாகச் செல்லுகிறது— இந்தப் பாதை பட்டாசமானது, கழுதைக் காதல் இழிவை உண்டாக்கும்— என்று தினமணிக்கு அறிவுறுத்துகிறோம்.

சட்டசபையில்

பிரிவினை முழக்கம்

சட்ட சபையில் தோழர் ஏ. கோவிந்தசாமி நாட்டுப்பிரிவினை குறித்துப் பேசியதாவது:—

வெள்ளைக்காரர்கள் நம் நாட்டிற்கு வியாபார மூலமாக வந்து இங்கிலீஷ் பாஷையை அரசியல் பாஷையாக புகுத்தி இந்த மொழி மூலமாக நம்மை அடிமைப்படுத்திவந்தார்கள். அதே முறையில் தான் இன்றைய தினம் வடநாட்டினர், டில்லி சர்க்கார், நம்மை அடிமைப் படுத்திக் கொண்டு தென் நாட்டை வியாபார ஸ்தலமாகவைத்துக்கொண்டு—சுரண்டும் இடமாக வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். சேட்களும் மார்வாடிகளும் மெத்தையில் படுத்துக் கொண்டு வியாபாரம் செய்யும் நிலைமையை நாம் பார்க்கின்றோம். திருச்சிக்கடுத்த கல்லக்குடி என்ற கிராமத்தை டால்மியாபுரம் என்ற வடநாட்டுப் பெயரைச்சூட்டி இருக்கிறார்கள். இதையெல்லாம் ஒடுக்க வேண்டும் என்பதற்காவும், இந்தச் சுரண்டலை ஒழிக்க வேண்டும் என்பதற்காவும் தான், பெரியாரும் அண்ணாவும் ஜவுளிக்கடையின் முன்பாக வடநாட்டார் வியாபாரக் கடைகள் முன்பாக தியாகம் செய்து மறியல் செய்தார்கள். இதை அடிப்படையில் வைத்துக் கொண்டு தான் மொழிவாரி மாகாணம் வேண்டும் என்றும் மொழியின் அடிப்படையில் தான் நாம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் திராவிடக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் வேலை செய்து வருகின்றன.

இது எல்லோக்கும் தெரியும். திராவிடம் பிரிய வேண்டும் என்பதற்காகத்தான் மதிப்பிற்குரிய மந்திரி மாணிக்கவேலு நாயக்கர் அவர்களும் உதவி சபாநாயகராக வீற்றிருக்கும் பக்தவத்சலு அவர்களும் இன்னும் இந்தப் பக்கத்திலுள்ள 38 பேர்களும் கையெழுத்திட்டு சென்ற தேர்தலில் வெற்றி பெற்றோம். நாம் வடநாட்டை விட்டுப் பிரிந்து சுகமாக வாழ வேண்டும் என்று தீர்மானித்தோம். காரணம் வடநாட்டார்கள் வரிகளையும் வருமானத்தையும் வாங்கிக் கொண்டு போகிறார்கள். இன்னும் சுரண்டல் மூலமாகவும் இன்சூரன்ஸ் மூலமாகவும் பாங்குகள் மூலமாகவும் சேட்கள் சுரண்டிக் கொண்டு போகிறார்கள். ஏன்? கல்லக்குடியை டால்மியாபுரம் என்று மாற்றும் பொழுது எதைத்தான் செய்யமாட்டார்கள். அதைப் போல் சென்னையில் சௌக்கார் பேட்டை என்று பெயர் வைத்து இருக்கின்றார்கள். ஏன்? டில்லியில் காம்ராஜ் பேட்டை என்ற பெயரை வைக்க முடியுமா? அகமதாபாத்தில் இப்படி நம் நாட்டின் பெயரை வைக்கமுடியுமா? நம் ராஜாஜி அவர்களும் அங்கு கவர்னர் ஜெனரலாகத்தான் இருந்தார். அப்படி இருந்தும் அவருடைய பெயரை அங்கு வைக்க முடியுமா? ஒருக்காலும் வைக்கவே முடியாது. காரணம் நம்முடைய பெயரை வடநாட்டில் வைக்கவே முடியாது. கல்லக்குடி என்ற பெயருக்கு பதிலாக டால்மியாபுரம் என்ற பெயர் வைத்ததற்காகத்தான் அந்தப் பெயரை எடுக்கவேண்டும் என்று இன்றுதோழர் கருணாநிதி போராட்டத்தை ஆரம்பித்தார் அவருடன் போராட்டத்தை நடத்திய பத்து தோழர்களும் சிறை பட்டார்கள். காரணம் மொழிவாரி மாகாணம் வேண்டும் என்ற காரணத்தாலும் வடநாட்டு ஆதிக்கம் இருக்கக்கூடாது என்பதற்காகத் தான். அவ்வித நிலைமை இப்பொழுது இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்றது. அது மாத்திரம் அல்ல, இன்றைய தினம் ஆந்திர ராஜ்யம் மொழிவாரி அடிப்படையில் பிரியப்போகிறது இந்தப் போராட்டத்தில் இவர்கள் வெற்றி பெற்றார்கள். இதற்காக சென்ற காலத்தில் கனம் பிரகாசம் அவர்கள் பல தியாகங்களைச் செய்து இருக்கின்றார். இப்பொழுது பொட்டி ஸ்ரீராமுலுவை பலி கொடுத்து ஆந்திர ராஜ்யத்தைப் பெறுகின்றார்கள். அந்த முறையில் தான் இப்பொழுது தென் நாட்டினர் வடநாட்டினரிடமிருந்து பிரிய வேண்டும் என்று போராட்டங்களை நடத்திக்கொண்டு வருகின்றார்கள். அதற்காகவே பல தியாகங்களையும் செய்து கொண்டு வருகிறார்கள். ஹிந்தி ஒழிப்புப்போராட்டத்தின் பெயரால், பெரியார் அண்ணா முதலியோர் சிறைப்பட்டனர். தாலமுத்து நடராஜன் ஆகிய தோழர்கள் உயிர்துறந்தனர். மொழியின் பெயரால் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. அந்த முறையில்தான் ஆந்திரர்களும், கன்னடியர்களும், மலையாளிகளும், தமிழர்களும் பிரியவிரும்புகின்றார்கள். இத்தனை பேர்களும் ஒரே குடும்பம் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எல்லோரும்சகோதரர்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு மொழியின் அடிப்படையில் பிரிந்து வாழவேண்டும் என்றும் நினைக்கின்றார்கள். அதற்காகத்தான் அண்ணாவும் போராட்டம் நடத்துகிறார்.

இந்த வகையில் மனக்கசப்புக் கூடாது — எல்லோரும் சகோதரர்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு மொழியின் அடிப்படையில் பிரிந்துவாழவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆந்திரர்களிடம் தமிழருடைய ஆதிக்கம்கூடாது, தமிழர்களிடம் ஆந்திரர் ஆதிக்கம் கூடாது, மலையாளியிடம் கன்னடியர்கள் ஆதிக்கம் கூடாது, அதைப் போலவே கன்னடியர்களிடமும்மலையாளிகளுடைய ஆதிக்கம் கூடாது. ஒருவருடைய ஆதிக்கத்தை மற்றவர்கள்விரும்பவில்லை. ஒருவருடைய சொத்தை மற்றவர் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒவ்வொருவரும் சுபீட்சமாக பிரிந்துகொள்ள முடியும். நேரு தலைவராக இருக்கும் வரையில், வடநாட்டு ஆதிக்கம் தென்னாட்டில் நீடிக்கும் வரையில் நமக்குத் தீர்ப்பு கிடையாது. நாம் சுபீட்சமாக வாழமுடியாது. நாம் சுமுகமாக பங்கிட்டுக்கொள்ள முடியாது. அந்த ஆதிக்கம் இருக்கு வரையில் குரங்கு அப்பத்தை பிரித்துகொடுத்தமாதிரியாகத்தான் இருக்கும். இப்பொழுது இருக்கும் நிலையில் தமிழர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் கசப்பு. மலையாளிகளுக்கும் கன்னடியர்களுக்கும் கசப்பு. இதெல்லாம் ஏன் வருகின்றது. நம்முடைய அதிகாரத்தை எல்லாம் வடநாட்டார்கள்வைத்துக்கொண்டு

இருக்கின்றார்கள். நாம் பிரிந்து கொள்ளக்கூட நமக்கு உரிமைகிடையாது. நமக்கு எந்தவிதமான உரிமையும் இப்பொழுது இல்லை. நாட்டில் எந்தவிதமான கிளர்ச்சி வந்தாலும் மொழி ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.

ஆகவேதான் ஆகஸ்டு 1-ம் தேதியில் பெரியாரும், அண்ணாவும் திருப்பதியிலிருந்து தூத்துக்குடி வரையிலுள்ள ரயில்வே நிலயங்களிலுள்ள போர்டுகளில் எழுதப்பட்டிருந்த இந்திமொழியை அழித்தார்கள். இந்திக்கு இங்கு என்ன இடம் இருக்கிறது? அன்று வெள்ளைக்காரன் இருந்த இடத்தில் ராஜேந்திரபிரசாத் இருக்கிறார். அன்று ஹோப் இருந்தஇடத்தில் பிரகாசா இருக்கிறார். அப்பொழுது எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட்டு வந்ததோ அவ்வளவு சம்பளம் இப்பொழுது கொடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளைக்காரச்சுரண்டல் அப்பொழுது எப்படி இருந்ததோ அப்படித்தான் இப்பொழுது இருக்கிறது. அவர்கள் வியாபார முறையில் இங்கிருந்து சுரண்டிக்கொண்டு போனார்கள். அன்று அவர்கள் எஜமானர்களாக இருந்தனர். இன்று வடநாட்டினர் எஜமானர்களாக இருக்கின்றார்கள். அந்த நிலைமையில்தான் இன்றைய தினம் கனம் பிரகாசம் அவர்கள் பொட்டி ஸ்ரீராமுலுவைப் பறிகொடுத்துவிட்டு பிரிந்து போகிறார்கள்.

அன்று நேரு அவர்கட்கு உண்மையை எடுத்துச் சொன்னோம். கவனம் செலுத்தவில்லை. பொட்டி ஸ்ரீராமுலு இறந்தபின்னரும் மக்களே எழுந்து கிளர்ச்சி செய்தார்கள். அதைப் பார்த்துத்தான் நேரு முட்டாள்தனம், சிறுப்பிள்ளைத்தனம் என்றும் சொன்னார். யார் கிளர்ச்சி செய்யச் சொன்னார்கள். இவ்விதம் கிளர்ச்சி செய்தால் அது முட்டாள்தனம் அல்லது சிறுபிள்ளைத்தனமா? அதை நேரு எப்படி வேண்டுமென்றாலும் விஸ்தரிக்கலாம். அதேமுறையில் இப்பொழுது திருத்தணியில் தமிழ்பேசும் மக்கள் இருக்கின்றார்கள். மந்திரி வி. சி. பழனிசாமி கவுண்டர் திருத்தணி வரை தமிழ்நாடு வேண்டும் என்று கேட்கிறார். அவர் வைணவர். அதனால்தான் அப்படி கேட்கிறார், போராட்டம் நடக்கும் போது நானும் திருத்தணிக்குப் போயிருந்தேன். கனம் வி. சி. பழனிச்சாமி கவுண்டரும் திருத்தணிக்குப் போயிருந்தார்.

கனம் வி. சி. பழனிச்சாமி கவுண்டர் பேசியதைப்பற்றி தினமணியில் பார்த்தேன். பத்திரிகை சொல்வது தவறாக இருந்தாலும் அது குற்றமாக இருந்தாலும் தமிழ் மந்திரிக்கு அந்த இடத்தைக் கேட்பதற்கு உரிமைஉண்டு. ஆந்திரர்கள்சேர்ந்து எங்கு இருந்தாலும் அதை ஆந்திராவுடன்சேர்க்கவேண்டும். அதைப் போலவே தமிழர்கள் எங்குசேர்ந்து இருந்தாலும் அந்த இடத்தைதமிழ் நாட்டுடன் சேர்க்கவேண்டும். அப்படித்தான் ராஜ்யத்தை அமைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் திருத்தணிக்குப் போனேன். அங்கு ஸ்தல ஸ்தாபன மந்திரி ஒரு உத்திரவு போட்டிருக்கிறார். அங்கு தமிழ் பாட்டு பாடக் கூடாது என்று. அதனால் மக்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். திருப்பதியில் தமிழ் பத்திரிகைகள் வரக்கூடாது என்று அங்கும் ஒரு உத்திரவு இருக்கிறது. அவைகளைக் கண்டு மக்கள் அதிருப்தி அடைகிறார்கள். எந்தப் பக்கத்தில் தமிழ் பேசுகிறார்களோ அதை தமிழ்நாட்டுடன் சேர்க்கவேண்டும்.

அதைப்போலவே எந்தப் பக்கங்களில் தெலுங்கர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அதை ஆந்திர ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதற்காகவே திருத்தணியில் சுமார் ஒருமாதகாலமாக ஒரு போராட்டத்தை ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். பல கிராமங்களுக்கு நான போய்ப்பார்த்தேன். ஆனால் நேரு என்ன சொன்னார். அவர்களை முட்டாள்கள் என்று சொன்னார். இது முட்டாள்தனம் என்றும சிறுபிள்ளைத்தனம்என்றும் சொன்னார். இன்றைய தினம் அண்ணாவின் விருப்பப்படி தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வரும் ரயில்கள் எல்லாம் நின்று வந்திருக்கின்றன.

அண்ணாவை சிறைப்படுத்தி இருக்கிறது, வடநாட்டு ஆதிக்கம். அவருடைய தோழர்களும சிறைச்சாலைக்குள் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். நேற்றைய தினம் முதன் மந்திரி நடவடிக்கை எடுத்த அதே மாதிரிதான் வருத்தத்தோடு கண்ணீர்விட்டுச் சொல்லுகிறேன். தூத்துக்குடியில் 4-பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். 25-பேர்கள் படுகாயம் அடைந்துள்ளார்கள். அது மட்டுமல்ல, கருணாநிதி கல்லக்குடியில் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார். 7 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் மதுரையில் 150-பேர்கள் சிறைபடுத்தப்பட்டிருக்கிறார்கள், கோவையில் 90-பேர்கள் சிறைபடுத்தப்பட்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் 100 — பேர்களும், சிதம்பரத்தில் 2 பேர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகையை பார்த்தால், எங்கும் ரயில் நிறுத்தம்ஏற்பட்டிருப்பதைக் காணலாம். 'முட்டாள் தனம்' 'சிறுபிள்ளைத்தனம்' என்று நேரு அடிக்கடி பிதற்றுகிறாரே அதற்கு பாடம் கற்பிக்கத்தான். மேற்கொண்டு ரயில் நிறுத்தம் இருக்கப்போவதில்லை. கிளர்ச்சி செய்பவர்கள் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்துகிறார்கள் என்பதற்காக, ரயிலிலுள்ள மெக்கானிசத்தை மாற்றி, சங்கலியைப்பிடித்து இழுத்தாலும், ரயில் நிற்காமல் ஓடும்படியான முறையில செய்து இருக்கிறார்கள். ரயிலுக்குமுன் மக்கள் படுத்துக்கொண்டு சாத்வீகமான முறையில் மறியல் செய்த மக்களை சுட்டுக் கொன்று இருக்கிறார்கள். கிளர்ச்சி செய்வதை 'சிறுபிள்ளைத்தனம்' என்று நேரு சொல்லுகிறார். அப்படியானால் நாம் சுயராஜ்யம் வாங்கினது எப்படி என்று கேட்கிறேன். அன்றையதினம் அன்னிய நாட்டுத்துணியை பகிஷ்கரித்தோம். உப்பு சத்தியாகிரகம் செய்தோம். "வெள்ளையனே வெளியேறு" என்று சொன்னோம். அதே முறை

புதிய நூல்கள்

பேசும் படம் 2—8—0

தில்லை-வில்லாளன்
தீட்டிய முதல் நாடக
நூல் இது.

அன்னியன் 0—4—0

சாமி எழுதிய
சிறந்த சிறு கதை

விபரங்களுக்கு:—
தம்பி வெளியீடுகள் :: சிதம்பரம்

யில் வடக்கத்தியானே வெளியேறு என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? வடநாட்டு ஆதிக்கம் வேண்டாம் என்று சொல்லும் போது ஆத்திரப்படுவானேன்? பிரிந்து போகின்ற ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் பாகம் பிரிக்க நீதிபதி வாஞ்சுவை வடநாட்டுச் சர்க்கார் அனுப்பிவைத்தது. நீதிபதி வாஞ்சுவுக்கு தெலுங்கு தெரியுமா? அல்லது தமிழ் தெரியுமா? ஆனால், தீர்ப்புக்கூற அவர் வந்திருந்தார். கோர்ட்டிலே, தீர்ப்பு அளிக்கக்கூடிய அந்த முறையிலே ஏதோ அவர் எழுதிவிட்டு அவர்கள் நமக்கு ஒரு அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள். அதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

ஒரு குடும்பத்தில் சகோதரர்களுக்குள் பாகம் பிரிக்கிறபோது சொத்தையும் பிரிப்பார்கள், கடனையும் பிரிப்பார்கள். அந்த முறையில் பிரித்து இருக்கலாம். ஆனால், அப்படி பிரிக்கவில்லை. பிரகாசம்போன்ற ஆந்திரத் தலைவர்கள் வடநாட்டுக்கு போனால் அவர்களுக்குச் சிறந்த மரியாதை உண்டு. ஆனால் தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு அவ்வளவு மரியாதை அளிகப்படுவதில்லை. காரணம் என்னவென்றால், ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள், தமிழர்கள் கிளர்ச்சி செய்வதில்லை. இன்றையதினம் பிரிந்துபோகின்ற ஆந்திர சகோதரர்களைப்போல், அண்டை பிரதேசமாகிய மலையாள தேசமும் தமிழ் சகோதரர்களை விட்டுப் பிரியலாம். பிரிந்து, மொழியின் அடிப்படையில, தனித்தனி பாஷாவாரி மாகாணமாக அமையலாம். அப்பொழுதுதான் வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து தென்னாடு, அதாவது திராவிடநாடு என்று ஏற்பட்டு திராவிடபெடரேஷன் என்ற முறையில் விளங்கமுடியும். திராவிடநாட்டுக்கு தலைவரை நாமே வைத்துக்கொள்ளலாம். பிரகாசம் காரு தலைவராக இருக்கலாம். அல்லது ராஜாஜி தலைவராக இருக்கலாம், அல்லது பழனிசாமி கவுண்டர் அவர்கள் தலைவராக இருக்கலாம்: யார் வேண்டுமானாலும் தலைவராக இருக்கலாம். ஆனால் நம்முடைய திராவிட நாட்டிலே, நேருஜியோ, ராஜேந்திரபிரசாத்தோ, பிரகாசாவோ தலைவராக இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு, இன்னொரு முக்கிய விஷயத்தையும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

ராஜாஜி அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்: பல லட்சக்கணக்கான மக்கள் சிறைபடுத்தப்படுகிறார்கள், சுட்டுக் கொல்லப்படுகிறார்கள், நாடு பிரிகின்ற இந்த நல்ல நேரத்திலே, ராஜாஜி கொண்டுவந்திருக்கிற புதுக்கல்வி திட்டத்தை வாபஸ்வாங்கவேண்டுமெனக்கேட்டு கொள்ளுகின்றேன்.

நாடு பிரிகின்ற நல்ல தருணத்தில், படிப்பின் நலனை முன்னிட்டு இந்தக் கல்வி திட்டத்தை வாபஸ் வாங்காவிட்டால் நாட்டிலே குழப்பமும், கொந்தளிப்பும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது முதல் மந்திரியார் கடமை என்று கூறிக்கொண்டு திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறி முடித்துக் கொள்ளுகின்றேன்.

☆

'டால்மியாபுரம்' மறைந்தது

'டால்மியாபுரம்' எனும் பெயர் மீது தோழர் மு. கருணாநிதியும் தோழர்களும் ஒட்டிய 'கல்லக்குடி' எனும பெயர் கம்பீரமாகக் காட்சி அளித்தபடி இருக்கிறது. முதல் நாள் நடைபெற்ற 'படுகொலை'யின் விளைவாகச் சுற்றுப்புறமெல்லாம் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பைக் கண்ட மேலதிகாரிகள், தமது அடக்குமுறை பயன் தராது என்பதைஉணர்ந்துகொண்டுவிட்டனர். இப்போது, எவரையும் கைது செய்வதில்லை. தினசரி, அறப்போர்வீரர்கள், ஸ்டேஷனுக்குச் சென்று, 'கல்லக்குடி' என்னும போஸ்டரை ஒட்டிவிட்டுத் திரும்புகின்றனர். டால்மியாபுரம், இல்லை! கல்லக்குடி காட்சியளிக்கிறது!

சோஷலிஸ்ட் கட்சியின் கண்டனம்

மதுரை மாவட்ட சோஷலிஸ்ட் கட்சியின் அமைப்பு செயற்குழு திராவிட இயக்கத்தாரின், போராட்டத்தைப் பற்றியும், துப்பாக்கி பிரயோகத்தையும் பற்றி கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிடுகிறது.

சென்னை மாகாணத்தின் எதேச்சதிகாரியும், பிற்போக்குவாதியுமான ராஜாஜியின் உதவாக்கரை "கல்வி திட்டம்" குழந்தைகளின் படிப்பையும், அவர்களின் எதிர்காலத்தையும், குறிப்பாக இந்நாட்டு தொழிலாளர், விவசாயிகளின்குழந்தைகளுடைய வருங்காலத்தை பாழ்படுத்தக்கூடியதாயிருக்கிறது. இதை எதிர்த்து ஏனைய கட்சிகளும் பொது மக்களும், கண்டனக்குரல் எழுப்பியும் செவி சாய்க்காது, ஒரு ஓட்டு கூட வாங்காது பதவிக்கு வந்து, உயர்ந்த ஜனநாயகம் பேசும் பாஸிட் இராஜாஜி, நாசகரமான புதிய கல்வி திட்டத்தை எதிர்த்து அமைதியான முறையில் போராடிய திராவிட இயக்கத்தினரையும் பொது மக்களையும், தடிகொண்டு தாக்கியும் கைது செய்ததையும் வன்மையாக கண்டிப்பதுடன், புதிய கல்வித் திட்டத்தை உடனே வாபஸ்வாங்குமாறு, சோஷலிஸ்ட் கட்சி, சர்க்காரை கோருகிறது.

பண மூட்டைகளின் பாதுகாவலரான பிரதமர் நேரு, தனக்கே உரித்தான அகங்காரமான முறையில் பேசியதின்பயனாக அமைதியான முறையில், "தூத்துக் குடியில்" போராடிய தி.மு.க. இயக்கத்தினர் மீதும், பொதுமக்கள் மீதும், காட்டுமிராண்டித் தனமாக, துப்பாக்கி பிரயோகம்செய்ததையும், டால்மியாபுரத்தில் இரத்தவெறிகொண்டு, கோரமான முறையில் சுட்டுத்தள்ளிய காங்கிரஸ் ஆட்சியின் ஆணவத்தைக் கண்டிப்பதுடன், மேற்படி துப்பாக்கி பிரயோகத்தை பகிரங்க விசாரணை நடத்துவதுடன், மேற்படி சம்பவத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கு, நஷ்டஈடு கொடுப்பதுடன், இதுவரை கைது செய்யப்பட்டுள்ளவர்களை நிபந்தனையின்றி உடனே விடுதலை செய்ய வேண்டுமெனவும் இக்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.